வரத்திய தரிசனம்.

மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

4-ம் பிரிவு 6-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி தொடர்ச்சியாக "நவ ஜீவன்" பத்திரிகையில் எழுதிவரும் சுய வரலாற்றில் 4-வது அதிகாரம் 6-வது அத்தியாயமாவது:—

தியாகபுத்தியும், அடக்கமான வாழ்வை நடத்தவேண்டுமென்ற உணர்ச்சியும் என் மனதில் ஊறிப்போய், மத உணர்ச்சியானது மென்மேலும் வளர்ந்தவந்ததால், புலால் மறுத்தலை ஒரு இயக்கமாக நடத்திவரவேண்டுமென்ற ஆர்வம் என் உள்ளத்தில் உதித்தது. பிரசாரவேலையைச் செய்வதற்கு ஒரு வழிதானிருக்கிற தென்பதை நான் உணர்ந்திருக்கேன். அதாவது, என்னாலில் அந்தக் காரியங்களைச் செய்து காட்டுவதும், இது சம்பந்தமான ஞானத்தைத்தேடி அனைவரிடம் விவாதிப்பதுமேயாகும்.

ஜோன்ஸ்பர்க்கில் ஒரு ஜெர்மானியர் ஹோட்டல் வைத்திருந்தார். அந்தக் ஹோட்டலில் புலாலை உபயோகிப்பதில்லை. அவருக்கு ஜூல ஹெச்சையில் அதிக நம்பிக்கையுண்டு. நான் அந்தக் ஹோட்டலுக்குப்போய் வந்ததுடன், எனது ஆங்கில நண்பர்களையும் அங்கு அழைத்துப்போய் அந்தக் ஹோட்டல்காரருக்கு உதவி செய்தேன். இருந்தாலும் பணத்தரித்திரம் அதைப் பிடித்திருந்ததால், அது அதிக காலம் நீடித்திருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. அதற்கு எந்த அளவு உதவி செய்யலாமென்று எனக்குத் தோன்றியதோ அந்த அளவு அதற்கு உதவி செய்தேன். அதற்காகச் சிறிது பணமும் என்கையைவிட்டுச் செலவழிந்தேன். ஆயினும் கடையோக அதை மூடிவிட நேர்ந்துவிட்டது.

பிரம்ம ஞானசங்கத்தில் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் அநேகமாகப் புலால்மறுப்பவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களில் ஒரு ஸ்திரீ மாதிரி சம்பந்தமில்லாத ஹோட்டலொன்றை விரிவான தோரணையில் நடத்த முன்வந்தார். அவருக்கு தெத்திரக்கலைகளில் அதிகப்பிரியமிருந்தது. தாராளமாகச் செலவு செய்பவராக அவரிருந்தார். சனக்கில் அவருக்கு அதிகப் பரிச்சயமில்லை. அவருக்குப் பல சிநேகிதர்கள் இருந்தனர். ஆரம்பத்தில் அவர் நிதமாக ஆரம்பித்தார். பிறகு பெரிய இடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, தொழிலை விரிவாக நடத்த ஆசைப்பட்டார். என்னுடைய செல்வநிலைமையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இருந்தாலும் அவர் சொன்னதை நான் சரியாக இருக்குமென்று நான் நம்பினேன். அவருக்கு உதவி செய்யக்கூடிய நிலைமையில் நான் இருக்கேன். என்னுடைய சகோதரர்கள் பெருந்தொகையை என்னிடமே விட்டுவைப்பது வழக்கம். அவர்களில் ஒருவருடைய சம்மதத்தைக் கேட்டு அவருடைய பணத்தில் ஆயிரம் பவுனை அந்த ஸ்திரீக்குக் கடனாகக் கொடுத்தேன். அந்தப் பெண்மணி தாராள புத்தியுடையவர். பிறரை நம்பும் குணம் அவரிடத்திலிருந்தது. ஆரம்பத்தில் அவர் ஒப்பந்தக் உலியாகத் தென்னாப்பிரிக்காவுக்குவந்தவர். "உங்களுக்குச் சம்மதமானால் இந்தப் பணத்தைக் கொடுங்கள். இந்த விஷயங்களைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. உங்களைத்தான் எனக்குத் தெரியும்" என்று சொன்னார். அவர் பெயர் பதரி. பிற்காலத்தில் சத்யாக்கிரக இயக்கத்தில் அவர் அதிகமாக முயன்று, சிறைத் தண்டனையும்அடைந்தார். அவர் கொடுத்த இந்த சம்மதம் போதுமானதென்ற நினைத்து, நான் அந்த ஸ்திரீக்குக் கடன் கொடுத்தேன்.

இரண்டு மூன்று மாத காலத்தில் இந்தப் பணத்தைத் திருப்பி வரும் செய்யமுடியாதென்ற எனக்குத் தெரிந்துவிட்டது. இவ்வளவு நஷ்டத்தை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது. இந்தப் பணத்தை வேறு பல நல்ல காரியங்களுக்கு நான் உபயோகப்படுத்

மிதக்கும் கல்

பாம்பனுக்கும் இருமேனிக்கும் மத்தியில் இருக்கிற குடாக்கடல் ஓரமாய் ஓர்வித வெள்ளைக்கல் இருக்கிறது. அதை கல்லை எடுத்துச்சென்று எழுந்திரத்தில் போட்டால் அக்கல் கடல் தண்ணீரில் மிதக்கு ஓடுகிறது. இப்படித் தண்ணீரில் மிதப்புக்கட்டை மாதிரியாக மிதக்கு ஓடக்கூடிய கல்லை எங்கும் பார்த்ததில்லை.

கு. பு. மா. வெ. வெங்கையாநாடார், உச்சிப்புளி.

நியிருக்கலாம். இந்தப் பணம் திரும்பி வரவேயில்லை. இருந்தாலும் என்னை நம்பிய பதரி கஷ்டப்படும்படி எப்படி நான் விடமுடியும்? அவருக்கு என்னைத்தான் தெரியும். அந்தப் பணத்தை நானே என் கையிலிருந்து அவருக்குக் கொடுத்துவிட்டேன் என்னுடைய கட்சிக்காரர் ஒருவரிடம் நான் இதைச் சொன்னபோது நான் செய்த பிசகிற்கு அவர் வருத்தப்பட்டார்.

"பாய், (அப்பொழுது நான் மகாத்மா வாகவில்லை; பாபுவும் (தகப்பனாரும்) ஆகவில்லை. கண்பர்கள் பாய் என்று என்னை அழைத்துவந்தார்கள்.) இதுபோன்ற காரியங்களை நீங்கள் செய்யக்கூடாது. நாங்கள் பல விஷயங்களுக்கு உங்களை நம்பியிருக்கிறோம். இந்தப் பணம் உங்களுக்குத் திருப்பி வரப்போவதில்லை. பதரி கஷ்டப்பட நீங்கள் விடமாட்டீர்களென்பதாக எனக்குத் தெரியும். உங்களுடைய கையிலிருந்து பணத்தைச் சீர்திருத்தப் பிரசாரத்திற்காக உங்களுடைய கட்சிக்காரர்களுடைய பணத்தை இவ்விதம் கொடுத்துக் கொண்டிருந்தால் அவர்கள் வீணாகப் போய்விடுவார்கள். நீங்களோ சீக்கிரத்தில் யாசிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிடுவீர்கள். ஆனால் நீங்கள் எங்களுக்கு டிரஸ்டியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஏழையாகிவிட்டால், பொது வேலையையே நிறுத்திவிட வேண்டிவரும்" என்று அவர் சொன்னார்.

அவ்விதம் சொன்ன கண்பர் கல்வேலையாக இன்னும் உயிருடனிருக்கிறார். தென்னாப்பிரிக்காவிலாகட்டும், கேதெஸாகட்டும், அவரைப்போல் தூய்மையான மனிதரை நான் கண்டதில்லை. யார்மீதாகிலும் அவர் சந்தேகப்பட்டுவிட்டுப், பிறகு நாம் சந்தேகப்பட்டது பிசகென்பதை அவர் அறிந்துகொண்டால், அந்த மனிதரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தம்மைத் தாய்மைப்படுத்திக் கொள்ளுவார். அவர் ஏச்சரிக்கை செய்தது வியாயமென்று நான் அறிந்தேன். பதரிக்கு 1000 பவுன் நான் கொடுத்துவிட்டபோதிலும், இன்னொரு ஆயிரம் பவுன் எனக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதைக்கொடுக்க எனக்குச் சக்தியிருக்காது. வேறு இடத்தில் கடன் வாங்கவேண்டி வந்திருக்கும். நான் எக்காலத்தும் கடன் வாங்கவில்லை; கடன் வாங்குவதையும் நான் எப்பொழுதும் வெறுத்து வந்திருக்கிறேன். சீர்திருத்தத்தில் அதிக ஆர்வமிருப்பதற்காக என்னை மீறி எதுவும் போய்விடக்கூடாதென்பதை நான் இதிலிருந்து தெரிந்துகொண்டேன். டிரஸ்டு பணத்தை இவ்விதம் கடன் கொடுத்தால் பலனை எதிர் பார்க்காமல் உழைக்க வேண்டுமென்ற நினைவில் சொல்லியிருப்பதையும் நான் மீறி நடந்துவிட்டேன். இந்தப் பிசகிலிருந்து எனக்கு புத்தி ஏற்பட்டது.

புலால் மறுத்தலுக்காக நான் செய்தியாம் வேண்டுமென்று செய்ததுமன்று; எதிர்பார்த்ததுமன்று. அவ்விதம் செய்யவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது.

இரவில் மணிபார்க்கும் ரேடியம்ரிஸ்லெட்கெடியாரம்

இந்தக் கெடியாரத்தில் இரவில் எவ்வளவு இருட்டாயிருந்தாலும் விளக்கு வெளிச்சமில்லாமல் மணி நமுருப்த் தெரியும். கையில்கட்டும் தோல்பட்டையுடன் விலை ரூ 6-8-0.

விலாசம்:- கலை தண்டு கம்பெனி, பாரீட்வுஸ்போஸ்ட், மதராஸ்.

இல்லறம்.

கனியிருப்பக் காய் அருந்துவதேன்?

"பத்தினி" நவசக்தியில் எழுதுவது

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

என்று பொய்யா மொழிப் புலவர் கூறிப் போந்தார். இல்லாழ்க்கைக்கு இம்மொழி பொருந்துவதுபோல் வேறு எவ்வாழ்க்கைக்கும் பொருந்தாதென்று நிச்சயமாய்க் கூறலாம்.

குடும்ப வாழ்க்கையில் இன்பம் குடிகொண்டிருக்க வேண்டுமானால், கணவனும் மனைவியும் மற்றவர்களும் இனியவை பேசுவதை ஒரு விரதமாகக் கொள்ள வேண்டும். ஒருவரை யொருவர் உயிர் போல் நேசிக்கும் நம்பிக்கையிருக்கலாம். ஆயினும் அவர்கள் இவ்விரதத்தை மட்டுமாகக் கொண்டொழுகாவிடின் விரைவில் அவர்கள் நேயங்குன்றுதல் நிச்சயம். ஆரம்பத்தில் இன்பமயமாயிருந்த அவர்கள் வாழ்க்கை நாளடைவில் துன்பமயமாதல் உறுதி. குடும்பத்தைச் சேர்ந்த மற்ற எல்லாருடைய விஷயமும் இவ்வாறே.

செல்வத்திற்கிணந்த குடும்பமாயிருக்கலாம்; வறுமையிலாழ்ந்த வீடாயிருக்கலாம்; ஆனால் எங்கும் சோபமும், எரிச்சலும் நிறைவேறுதற்கு ஏதுவான காரியங்கள் சிலாமலிருப்பதில்லை. தவறு செய்தல் மனிதர் இயல்பு. அவ்வாறே தன் தவறைத்தான் உணராதிருத்தலும் மனித பலவீனம். எனவே, ஒருவருக்கு மேல் கூடியிருக்கு மிடங்களிலெல்லாம், சச்சரவுகளுக்கு ஏது இல்லாமற் போகாது. செல்வர்கள் குடும்பங்களுக்கும், தெத்தமான குடும்பங்களுக்கும், ஏழைக் குடும்பங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் வறுமை அதிகமாக ஆக சச்சரவுகளுக்கும், மனத்தாங்கல்களுக்கும் ஏதுக்களும் அதிகமாகும். இவ்விதிக்கு விலக்காயிருக்கும் ஏழை இல்லங்களும் உண்டு.

எனவே, எல்லாவகையிலுள்ளவர்களாயினும், ஒருவர் தவறை ஒருவர் சகித்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாயிருக்கலன்றி, குடும்ப வாழ்வு செவ்வனே நடைபெறல் அரிது. ஏதாவது பெருந்தவறு நேர்ந்து விட்டாலும் அதை இனிய சொற்களால் எடுத்துக் காட்டவேண்டும். ஒருவருடைய செயலாலோ, செயலின்மையாலோ, மற்றவருக்கு எவ்வளவு பெரிய துன்பங்கள் நேர்ந்து விட்டாலும் இன்னாச் சொற்களை மட்டும் உபயோகித்தல் கூடாது.

* * *

நேர்த்தரமான குடும்ப மொன்றை எடுத்துக் கொள்வோம். மனைவி வீட்டுக்காரியங்களைப் பார்க்கிறாள். கணவன் வெளியே (சென்று பொருள் தேடிவருகிறான். வீட்டிலோ இரண்டு மூன்று குழந்தைகள்; ஒரு கிழவரும் இருக்கிறார்கள். காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்தால் இரவு 10 மணிவரை மனைவிக்குக் காரியம் சரியாயிருக்கிறது. ஒரு நாள் சமையல் செய்ய காழிகையாகிவிட்டது. அவசரத்தில் குழம்புக்குக் கொஞ்சம் உப்பு குறைவாகிவிட்டது. இனிய சொல்லுடைய கணவனாயிருந்தால் என்னசொல்வான்?

"இன்று குழம்பு அமுதமாயிருக்கிறது. ஆனால் இரண்டு உப்பு அதிகம் போட்டிருந்தால் இன்னும் நன்றாயிருக்கும்" என்பான்.

"அட்டா! அப்படியா? சற்றே இருங்கள். இதோ பொடி பண்ணிப் போட்டு விடுகிறேன்" என்பாள் மனைவி.

"நானே முதற்கொண்டு இப்படியாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். வெளியில் போய் கஷ்டப்படுகிறவர்களுக்கு நல்ல சமையல்கூடப் பண்ணப் போடாவிட்டால் நம் ஏதற்காக இருக்கிறது?" என்று அவன் மனதில் எண்ணிக் கொள்வான்.

கடுஞ்சொல்லுடைய கணவனாயிருந்தால் இதோகாரியம் எவ்வளவுக்கு வந்து முடிகிறதென்பது?

"சனியன்! எப்போதும் இப்படித்தான். அந்த இழவு உப்பை இரண்டு கூடப் போட்டுத் தொலைத்தால் என்ன?"

"புரட்டுகிற புரட்டலுக்கு இது போதாதாக்கும். ஒரு வாயைக்குச் சமைத்துப் பார்த்தால் தெரியும்."

"நான் சமைக்கிறேன்; மூன்று வேளையும் தின்றுவிட்டு உனக்கு வேறென்னவேலை?"

"நான் ஒருத்திதான் சாப்பிடுகிறேன்; பாக்கிப் பேரெல்லாம் பட்டினி கிடக்கிறார்கள்."

"ஓ! ஓ! வாயை மூடு"

"இதுதான் தெரியும். வேறென்ன தெரியும்? நம்மை யொத்தவர்களென்றாரும்—"

கணவன் எழுந்து எச்சில் கையோடு இரண்டு அடிவாங்கிவிட்டால் அந்தப் பெண்மணி செய்த பாக்கியந்தான்!

* * *

இன்னும் ஓர் உதாரணங்கூறுகிறேன். மழைநாள். ஈரவிறகு. இவ்வு ஒன்பது மணிக்கு விருந்தினர் இருவரை அழைத்துக்கொண்டு கணவன் வீடு சேர்கிறான். மனைவிக்கு எரிச்சல் உண்டாவது மிகவும் சகஜம்.

"வேலை யென்ன? வழியில் போகிற வேலையல்லவாம் இழுத்துக் கொண்டு வருகிறது. காய்ந்த விறகாக வாங்கிப் போடுவதற்குத் தப்பில்லை. மண்ணெண்ணெயோ வேறோ. அதெல்லாம் என்னால் முடியாது."

இத்தனைக்கும் இவள் தன் கணவனிடம் அளவுற்ற அன்புடையவளாயிருப்பாள். அவனுக்குக் காலைத் தலையை வலித்துவிட்டால் தன் உயிரையே விட்டுவிடுவாள்.

கணவனுக்கு ஒருபுறம் வெட்கம்; ஒருபுறம் துக்கம். இவைகளை சண்டை போடுவதற்கு அது சந்தர்ப்பமன்றுபல்லைக் கடித்துக்கொண்டு "ஐயோ! உன்னைக் கட்டிக்கொண்டதைவிட ஒரு பேயைக் கட்டிக்கொண்டிருக்கலாம்" என்பான்.

"யார் வேண்டாமென்றார்கள்? நான் தான் என்ன கதறுகிறேன்?"

"அடிபோடி, சத்தம் போடாதே. முடியாதென்றால் சொல்லிவிடு. நான் ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போகிறேன்."

ஆனால் அப்படியொன்று நேராது. இந்தப் பெண்மணி தராமணி நேரத்தில் அருமையாகச் சமையல் செய்து போட்டுவிடுவாள். காரியம் செய்வதிற் குறைவில்லை. கடுஞ் சொற்களால் கணவன் மனம் நோகச்செய்வாளேன்? இல்லற இரகசியம் தெரிந்த பெண்ணாயிருந்தால் அதைக் கத்தப்பதில் என்ன செய்திருப்பாள் தெரியுமா?

"அப்படியா? இதோ சமையல் ஆகிவிட்டது. நம்வீட்டு விருந்தாளி. அடுத்தவீட்டில் போய் காய்ந்த விறகு இரண்டுவாங்கிக்கொண்டு வந்து அடுப்பு மூட்டுகிறேன். நீங்கள் வந்தவர்களுக்குப் பதிரிகை கொடுத்து வரிக்கச் சொல்லிவிட்டு, இரண்டு குடம் ஜலம் கொண்டு வந்துவிடுகிறீர்களா? அப்புறம் சொக்காயப்பட்டால் கொஞ்சம் கறி நறுக்கிக் கொடுத்து விடுங்கள். இதோகால் மணியில் சமைத்து விடுகிறேன்."

இவள், கணவனிடம் வேலையும் வாங்கிக்கொண்டு நல்ல பெயரும் வாங்கிக்கொள்கிறாள். கணவன் இவளிடம் அளவற்ற கன்றியுடையவனாயிருப்பானென்று சொல்லவும் வேண்டுமோ?

கணவன், மனைவி இருவரும் இன்சொல்லுடையவர்களாயிருந்தால், இல்வாழ்க்கை வேறு எத்தனை குறைபாடுகளுடையதாயிருந்தாலும் இன்பமயமாகத்திகழும். இருவரில் ஒருவரேனும் இன் சொல்லுடையவராயின், மத்திய தரமாயிருக்கும். இருவரும் கடுஞ் சொல்லராயின் இல்வாழ்க்கை நரகவாழ்க்கையிலும் கொடியதாகும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

பலதுறைக் காரிகை.

"குடியா"சில் கைவல்யசாமியார் பின் வருமாறு எழுதுகிறார்:—

திரு. டி. ஆர். ராமச்சந்திர அய்யர் பெரியவக்கீல் சாஸ்திரம் படித்தவர். மலையாளத்து பிராமணர். எழுபது வயது ஆயும் வக்கீல் வேலையை விட மாட்டேன் என்கிறார். இவர் வரைப் பிரண்ட்தாரெமம் எப்பொழுது அடைவது? மகனுக்கு வயது வந்தவுடனே வானப்பிரஸ்தாசிரமத்தை அடைய வேண்டுமென்று இவர்கள் சாஸ்திரம் விதித்திருக்கிறது. என் சிநேகிதர் ஒருவருடைய கோர்ட்டு அப்பீல் கேசுக்கு நானூறு ரூபாய் பீஸ்வாங்கிக் கொண்டு விசாரணையன்று வேறு வக்கீலுக்கு ஒரு காகிதம் கொடுத்து விட்டு இவர் வேறு ஊருக்குப்போய் விட்டார். பணம் வாங்கின வக்கீலுக்கும் காகிதத்திற்காக வந்த வக்கீலுக்கும் உள்ள வித்தியாசத்தையும் கேசுலுள்ள சிரத்தையையும் நீங்களே கவனித்துப் பாருங்கள். இதுவர்ணாசிரம தர்மமா? வாங்கின பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிடுவது தர்மமா? அல்லது ஏதோ ஒருவனைக் காண்பித்து பணத்தை எடுத்துக்கொள்ளுவது வருணாசிரமதர்மமா? இப்படியா பிராமணனுக்கு அவனது வருணாசாரம் விதித்திருக்கிறது? திரு. டி. பெங்காச்சாரியார் ஆப்பிரிக்காவிற்குப் போகையில் மலை போட்டு ஆசீர்வதிக்கும்படியாகிறார்? இது வருணாசிரம தர்மமல்லவா? இவர் ஊர் மலையாளத்தில் ஈழவர் தீயர் முதலான ஜாதிகளை வீதியில் நடக்கக்கூடாது என்கிறாரே; இது மட்டுமா வருணாசிரம தர்மம்? ஆனால் பிராமணன் இஷ்டமான தேசத்திற்குப் போகலாம். ஆடு, மாடு, மனைத்தையும் தனிவிற்குமீறி உண்ணலாம். வேண்டியதைக் குடிக்கலாம். வருணாசிரமத்தலைவர்கள் வழியனுப்பி ஆசீர்வாதம் செய்வார்கள். நம் மதம் நம் சொன்னை நம்மைப்போன்ற ரூபம் கலையுடையவர்களை யுக்தியவர்களை 144 போட்டு வீதியில் வராமல் தடுக்க ஏற்பாடு செய்வார்கள். இது என்ன வர்ணாசிரம தர்மமா?

திண்ணனூர், நாசர்புரம் போஸ்டு ஸ்ரீதேவதாஸ் பி. ஏ. எல். டி. "பாரதகிறிஸ்தவ லர்த்தமானி"யில் பின் வருமாறு எழுதுகிறார்:—

கிறிஸ்தவர்களாக்கூடி நாசர்புரம் என்ற ஒரு குடியிருப்பு சென்னைக் கதத்த திண்ணனூர் ஸ்டேஷன் பக்கத்தில் கதத்திலும் ஜலத்திலும் சேர்ந்தமையான ஒரு இடம் கொண்டு அதில் ஒரு கூட்டுறவு சங்கமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த சங்கத்தில் மெம்பராகி மாதா மாதம் 5 ரூ. அல்லது 10 ரூ. கட்டிவந்தால் இரண்டு மூன்று வருஷத்தில் 200, 300 ரூ. சேரும். அதைக்கண்டு அந்த சங்கத்தில், 5 மடங்கு அரவது 200 ரூ இருந்தால் ரூ 1000, கடனாக வீடுகட்டக் கொடுக்கிறார்கள். இந்தக் கடனை மாதத்திற்கு 7 ரூபாயாகக் கட்டிவர வேண்டியது. வட்டி வருஷத்துக்கு 100-க்கு ரூ 6½ தான். ஆகையால் வீட்டைக்கட்டின பின் அதிலிருந்து கொண்டு அல்லது வீட்டை வாடகைக்கு விட்டு மாதம் கட்ட வேண்டிய கொகையை வெகு சுலபமாகக் கொடுத்துவரலாம். இவ்விதமாக கிறிஸ்தவர்கள் மத்தியில் வீடு கட்டி ஒரு கிறிஸ்தவ குடும்பமாக ஜீவிக்க பிரியமுள்ளவர் கீழ்குறிப்பிட்ட விலாசத்திற்கு எழுதி உடனே தெரிவிக்கவேண்டியது. இவ்விடத்தில் கோவிலும், ஆரணைகளும், பள்ளிக்கூடமும் ஒழுங்காய் நடந்து வருகின்றன. காலேஜில் படித்தவர்கள் சென்னையில் போய்ப்படித்து வரலாம்.

வீதியிற் செல்ல ஜீவபிராணிகளுக்கு இருக்கும் உரிமை மானிட சகோதரர்களுக்கு இல்லையா?

கான்பரென்ஸ்.

அன்பார்ந்த சகோதரர்களே!

காலமாறுபட்டால் சற்று அயர்ந்திருந்த நமது சங்கம் தற்போது புத்துணர்ச்சிபெற்று ஜெபபேரிகையை ஓர் கையிலேந்தி மற்றொரு கையால் நம் ஜன சமூகத்தை பதினோராவது மகாநாட்டை அதிவிரைவில் நடத்தும்படி அறைகூவி அழைக்கின்றது. சங்கம் வேலை செய்யவில்லை என்று குறைகூறிய கண்பர்கள் இந்த சமயம் தங்கள் ஊக்கத்தைக் காண்பித்து மகாநாடு அதிவிரைவில் அதிவிமரிசையாய் நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் செய்யவேண்டியது. நாகரீக முதிர்ந்த இவ்விருபதாம் நூற்றாண்டில் தேசம் விடுதலையை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கையில் க்ஷத்திரியர்களாகிய நாம் ஏன் அயர்ந்து தூங்கவேண்டும்? இந்த சமயம் நாம் தூங்கினால் ஜாதி கலகம்பூண்டவர்களால் அழுத்தி நசுக்கப்படுவோம் என்பதை க்ஷத்திரிய உத்தம வீரர்களாகிய நாம் மறந்துவிடாதிருக்குமாறு வேண்டுகிறேன். இதுநிற்க,

சுமார் ஒரு மாதகாலமாய் சங்கம் காரியசரிகள் மகாநாடு நடத்துவதில் தங்கள் முழுகவனத்தையும் செலுத்தி வேலைசெய்து வருகிறார்கள். நாடார்கள் வசிக்கும் எல்லா முக்கிய ஊர்களுக்கும் விஜயங்கள் வரையப்பட்டன. ஆனால் ஒரு ஊரிலிருந்தாவது சரியான தகவல் கிடைக்காதது பற்றி விசனிக்கப்படுகிறோம். கும்பகோணம் அபிமானிகள் சற்று ஆதரவளிப்பதாகத் தெரிந்தது. அந்த ஊரிலே ஸ்ரீமான் வ. எம். எஸ். அண்ணாமலையாடாரை அனுப்பிவைத்தார்கள். அவரும் சென்று ஒருவாரு ஜெயத்துடன் திரும்பிவந்தார். 25-6-27-ல் நடந்த கௌன்சில் மீட்டிங்கில் இது விஷயமாய் ஆலோசித்துக் கொண்டிருக்கும் சமயம் கும்பகோணம் ஸ்ரீமான் செ. தங்கவேலுநாடார் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவருடன் இது விஷயமாய் ஆலோசித்ததில் அவரும் அங்கு நடந்த ஒப்புக்கொண்டார்கள். கும்பகோணத்தில் மகாநாடு நடத்தக் கீழ்கண்டவர்களடங்கிய ஓர் கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

ஸ்ரீமான் வ. பு. அ. சொக்கநாதபாண்டியநாடாரவர்கள் தலைவர், ஸ்ரீமான் ரு. ஆ. முத்துநாடாரவர்கள், ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தரநாடாரவர்கள், ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடாரவர்கள், ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுகநாடாரவர்கள். மேற்கண்டவர்கள் மகாநாடு நடத்தும் விஷயத்தில் தக்க ஆற்றல் படைத்தவர்கள். இத்தகையவர்கள் அடங்கிய கமிட்டியையியமித்ததிலிருந்து மகாநாடு அதிவிமரிசையாய் நடைபெறுமென்பதில் சந்தேகமின்று. கும்பகோணத்தில் நடைபெறும் பதினோராவது மகாநாடு அதிவிமரிசையாய் நடந்து அதிமுக்கியமான தீர்மானங்கள் செய்து அதிவிரைவில் அமுலுக்கு வந்து நம்ஜன சமூகம் அதிவிரைவில் முன்னுக்கு வருமென்று நம்புகிறேன்.

வ. தி. சங்கரலிங்கநாடார்.

பழுதுபட்ட நோட்டுகளை மாற்றுதல்.

பழுதுபட்ட கரன்வி நோட்டுகளை கவர்ன்மெண்டில் கொடுத்து மாற்றிக் கொள்வதில் சற்றேபோது இருமுக்கியமான தீர்மானங்களை இந்திய கவர்ன்மெண்டார் இயற்றியிருக்கிறார்கள். அதாவது:—

(1) 10 ரூபாய் அதற்குக் குறைந்த நோட்டு வைத்திருப்பவர்கள் பழுதுபட்ட நோட்டில் பாதிக்குமேல் ஆஜர் செய்யவிடில் அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட மாட்டாது.

(2) உயர்ந்த நோட்டுகளுக்கு பழுதுபட்ட 14 காட்களுக்கு பணம் கேட்கப்படாவிடில் பின் பாதிதொகையே கொடுக்கப்படும்.

அதிரசக்கூட்டம்.

வழிவிடாபோய்க்கொண்டிருக்க ஒரு பிரபுமகன் அருகாமையில் மாடு மேய்த்துக்கொண்டிருக்க ஒரு பையனைப் பார்த்து தமாஷாக, அடே! மாட்டுக்காரப்பயலே! என்றான்.

ம—பிரபு நான் உலகிற்கு மாட்டை மேய்ப்பவனே யன்றி மாட்டுக்குச் சொந்தக்காரர்கள் பிரபுக்களாவர்; ஆகையால் மாட்டுக்காரப்பயல் நானல்ல.

பிரபு—ஏதடா மாடு மேய்க்கிற பயலுக்குக் கொழுத்துப் போச்சோ!

ம—உமக்கென்ன வாய்க்கொழுப்பா? ஈசன் ஏறி ஏக்குமுலாவுகிறது மாடு; எம்பெருமான் மேய்த்து விளையாடியது மாடு; எம்மிருகங்களினுயர்ந்ததுவுமாடு; எப்பாலினுமுயர்ந்த பாலுள்ளதுவுமாடு; இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும் பசுமாடு; எல்லோருக் தெய்வமெனக் கொண்டாடுவதும் பசுமாடு. இதைக் கேவலமாய்ச் சொல்வதால் வருமனேகல் கேடு; இனிமேற் பேசாது வாயை மூடு; பேசினால்ப்போடுவேன் வாயில்க்கூடு; தக்க மரியாதை கேடு; தான் வந்த வழிபார்த்து ஓடு, ஓடு, ஓடு.

தகப்பன்— பரீட்சை யிற்றேறி விட்டாயா?

மகன்—எப்படித்தேறுவேன்.

த—என்?

ம—சாம்பிராணியாசாமியனை நீங்கள் கண்டுபேசவில்லையே.

த—மடைய சாம்பிராணியையா?

ம—இல்லை இல்லை. நெய்வேத்தியக் கரடியை.

த—கோயில்க் குருக்களையா?

ம—இல்லை. புலியை.....

த—ஓகோ! லஞ்சப்புலியனையா? கான் லஞ்சப்பிரபு வாச்சேடா.

ம—லஞ்சனும் லஞ்சனுமாயிருப்பது பற்றித்தான்கான் சஞ்சலமடைகிறேன்.

ம—தாயே ஊதுகாய் தந்தால் சாப்பிடுவேன்.

தா—ஊருகாய்ந்தால் சோறு எப்புராவிடைக்கும்

ம—சட்டம் படியாதம்மா?

தா—அது ஒங்கப்பாவுடனேயே.

கோச்சடை, நாடார்பரிபாலன அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தினுதவில் 24-6-27-ல் இரவு 10 மணிக்கு கோச்சடையில் தயாரித்திருந்த நொச்சாரக்கொட்டகையில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது.

ஷை கூட்டத்திற்கு நாடார்மஹாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள் அவைத் தலைமை வகித்தார்கள்.

கோச்சடை ஸ்ரீமான் ராமசாமிநாடாரால் கடவுள் வணக்கம் பாடப்பட்ட பின்னர், ஸ்ரீமான் எ. எம். எஸ். அண்ணாமலைநாடார் அவர்கள் நமது முன்னேற்றமென்னும் விஷயமாயும், ஸ்ரீமான் ப. ரா. முத்துசாமிநாடாரவர்கள் பாண்டியர் அரிஞ்சிந்த விஷயமாயும், ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தரநாடார் அவர்கள் கதர் விஷயமாயும், ஸ்ரீமான் ஆ. க. முத்துக்குமாருநாடாரவர்கள் இனிச் செய்யவேண்டிய வேலை என்னும் விஷயமாயும், ஸ்ரீமான் சி. வ. அ. வாலாப்பிராணியநாடார் அவர்கள் மேற்கண்ட விஷயங்களை ஆதரித்தும், ஸ்ரீமான் வ. தி. சங்கரலிங்கநாடார் அவர்கள் நாடார்குல மித்திரன் பத்திரிகை விஷயமாயும், அவைத்தலைவர் நமது ஜனசமூகத்தைச் சேர்ந்திருந்த வேண்டிய விஷயமாயும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவைத்தலைவரவர்களுக்கும் மற்றும் உபந்நியாசகர்களுக்கும் புஷ்பஹாரங்கள் சூட்டப்பட்டு ஸ்ரீமான் எ. எம். எஸ். அண்ணாமலைநாடாரவர்களால் வந்தனோபசாரம் செல்லப்பட்டு இரவு 1 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது என்று ஒரு கிருபர் எழுதுகிறார்.

இலங்கைக் கடிதம்.

(மனோகரன் எழுதுகிறார்)

முதல் மந்திரியின் விஜயம்.

சென்னை சட்டசபையகத்துள் இது சமயம் முதலமைச்சராக நிர்வாகம் நடத்திவரும் திருமிகு டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் 22—6—27-ல் இரவில் மார்க்கமாக தமது மனைவி மக்கள் சகிதம் இங்கு விஜயம் செய்தார்கள். அவர்களை மருதானை ஜங்ஷனில் ஸ்ரீ லாஜானந்த சுவாமிகளும், இலங்கைச் சட்டசபை இந்தியப் பிரதிநிதிகளிலொருவரான கௌரவ கோ. சடேசையரவர்கள் ("தேசபக்தன்" பத்திராதிபர்) ஆதிதிராவிட வைதிக சமாஜத் தலைவர்களும், ஸ்ரீமான் ஏசதாஸ் நாடார், மனோகரன், பி. பி. ஐயங்கார் முதலானோரும் செட்டிமக்கள் சிலரும் வரவேற்றனர். அன்று மாலை 4 மணியளவில் கொள்ளுபிட்டி, சிங்கபாத் ரோடு, லேடீஸ் ஸொஸைட்டி மண்டபத்தில் ஸ்ரீமான் மர்சிலியர்களைத் தென்னிந்திய ஆதிதிராவிட வைதிக சமாஜத்தார் சார்பில் வரவேற்ற உபசாரப் பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது. கனம் மந்திரியவர்கள் பதிலிறுக்கும் முகத்தான் வரவேற்புப் பத்திர வாயிலாக வேண்டியிருந்த கலவி வசதி, ஸ்தல ஸ்தாபனங்களில் அதிகப் படியான பிரதிநிதித்வம் முதலாகிய வேண்டுகோளுக்குத் தகுந்த பதிலளித்ததுடன் "இதுவரை உங்களுக்குச் செய்தவைகளைத்தும், நீங்களும் மனிதர்களே யென மதித்து மனிதவர்க்கத்துக் குரிய சமத்துவத்தை யாவரும் அடைய வேண்டுமென்றெண்ணியே செய்திருக்கிறோம். ஆண்டவனருளால் இனியும் அவ்வண்ணமே செய்யயாமும் எமது சாக்களும் பின் வாங்கமாட்டோ"மெனக் குறிப்பிட்டார். பின்னர் ஸ்ரீமத் சுவாமிகளாலும், கௌரவ சடேசையரவர்களாலும், பி. பி. ஐயங்காரவர்களாலும், சே. பி. வென் அவர்களாலும் வாழ்த்துரைகள் கூறப்பெற்று சுமார் 6 மணியளவில் கூட்டம் சாந்தியுற்றது.

அவசரத்தில் அனர்த்தம்.

இலங்கை மா. பா. கோ. நோட்டத்தில் ஒரு சேணியக் கிழவி தனது மகன் மகள் இவர்களுடன் கூலிவேலை செய்துவந்தாள். வயது 85. இவள் ஜூன் மாதம் 7-ந்தேதி காலை 6-மணிக்கு உணவுகொண்டிருந்த போது திடீரென்று இறந்துபோனாள். போலீசுக்கு எழுதியதில் டாக்டர் வரவில்லை. பிணத்தைக் கோணியில் கட்டிப் புதைத்தார்கள். நாலுநாள் கழிந்து டாக்டர் வந்தார். பிணத்தைத் தோண்டி யெடுக்க யாரும் முன்வாராதாலு, ஆளுக்கு நாலுரூபாய் கொடுத்து நாலு கூலியாளைக் கொண்டு தோண்டியெடுத்தார். பிணத்தை டாக்டர் சோதனை செய்து ஒரு தவறுமில்லையென்று முடிவு செய்தார். பின்னர் திரும்பவும் வைத்துக் குளியில் மூடினார் என்று புஷ்பகுல பீபி எழுதுகிறார்.

அகாலமரணம்.

நானது ஜூன்மீ 24உ வெள்ளிக்கிழமை மீர்காமமிருந்து மோட்டார் லாரியில் தனது வியாபாரங்களை ஏற்றிக்கொண்டு வந்த கம்குளச் செல்வர் மகா—ா—ஸ்ரீ அப்பாவுநாடாரென்பவர் கடவத்தை ரோடில் ஏதோ அகஸ்மாத்தாய் காரிலிருந்து கீழே தவறிவிழுந்தவுடன் மரணமானார். பேலியக்கொடை—போலீஸ் ஸ்டேஷனில் பிரேதபரிசோதனை நடந்து மறுநாள் காலை 9—மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. இந்தியாவிலுமுத்திருஷ்ணபுரம் வரையிலே இன்னவரின் அகாலமரணங்குறித்து அனேகரும் ஆழ்ந்துவருந்துகிறார்கள் என்று ஸ்ரீமான் க. வ. சட்டையானந்தநாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ஆ ஆனி மீ உ௰உ

கௌன்ஸில்.

நாடார் மகாஜன சங்கம்

கௌன்ஸில் கூட்டம், 25-6-27ல் ஸ்ரீமான் வ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் (வைஸ்பிரஸிடெண்ட்) அவர்கள் தலைமையின் கீழ்க்கூடிச் செய்த தீர்மானங்கள் சென்ற வாரத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பொதுஜனங்கள் குறைகூறுவதற்கிடமின்றி கௌன்ஸிலர்களில் சில முக்கியஸ்தர்கள் விஜயஞ் செய்து ஏழைமாணவர்கள் ஸ்காலர்ஷிப், ஸ்கூல் கிரான்ட், பதினோராவது கான்பரன்ஸ் நடத்துதல் முதலியவைகளைப் பற்றி மெகு அனுதாபத்துடன் ஆலோசிக்கப் பெற்றதில் ஒற்றுமைச்சியும் சமூகக்குறைபாடுகளைத் தீர்ப்பதில் தலைவர்களுக்குள்ள அனுதாபமும் காணப்பெற்றன. ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கும் அளவுக்கு திருப்தி செய்யப் போதுமான மூலதன மில்லாவிடினும் காலதாமதமின்றி வருமானத்தின் அளவுக்கு சிலருக்காவது கொடுப்பதென்று ஏகமனதாய்த் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நமது வாலிபர்களும் தலைவர்களும் சங்கம் லாட்டரிச்சீட்டு பூரணவெற்றிபெறச் சிறிதுதீவிரமுயற்சி செய்திருப்பின் இவ்வளவு கஷ்டங்கள் தோன்றியிரா. இன்னும் விண்ணப்பங்கள் செய்யும் எல்லாமாணவர்களையும் கரை யேற்றிவைக்க வழியில்லாமற் போகவில்லை. தலைவர்களும் தலைவர்களும் ஒரு திரண்ட மூலதனம் சேர்க்க இன்னும் முயற்சிக்கவில்லை. சங்கம் தோன்றிய இந்நாள்வரையும் அவர்கள் அந்தவேலையைப் பூரணமாக ஆரம்பிக்கவில்லை. அதற்குமா ஒரு காலம் வரக்கூடும்? அந்நாள் வருக ஆண்டவனைத் துதிப்போமாக.

ஜனங்கள் மனதில் உறுதிக் கொண்டிருக்கும் கான்பரன்ஸ் சம்பந்தமாகவும் ஒருவகையில் திருப்திகரமாய் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. என்றாலும் அதற்காக ஏற்பட்டிருக்கிற கமிட்டி காலதாமத மின்றி கும்பகோணம் சென்று செய்யும் வேலையைப் பொறுத்தும், கும்பகோணம் நாடார் குலாபிமானிகளின் மனோநிலைமையைப் பொறுத்துமிருக்கிறது. கோயம்புத்தூருக்குப்போகிற நாடார் குலாபிமானிகளும் அக்கமிட்டியுடன் கும்பகோணம் போவார்களென்று தெரிவதாலும், கும்பகோணத்திலுள்ள பெருந்தலைவர்களுக்குள்ளும் வெகுநாளாக மகாநாட்டை நடத்திவைக்க வேணுமென்ற ஆசைபிரும்பதாலும் எப்படியும் காரியம் நிறைவேறுமென்றே நம்பு[illegible] ஜூலை மீ 4உ கோயம்புத்தூரிலிருந்தே அக்கமிட்டியார் கும்பகோணம் வருவதாக உத்தேசித்திருப்பதால் ஏற்கனவே குடந்தை நாடார்குலாபிமானிகள், மற்றும் தஞ்சை ஜில்லாப் பிரமுகர்களையும் அழைப்பித்து கமிட்டியை வரவேற்று உடனே உபசரணைக் கமிட்டி நியமனஞ்செய்வார்களாக. ஸ்ரீமான்கள் பெரியதம்பி நாடார், கருப்பசாமிநாடார், சந்திவீர நாடார், கூடலிமுத்துநாடார், சாமிதாத நாடார் முதலிய தலைவர்கள் சரியான முயற்சி செய்தால் முடியாத காரியமுளதோ?

இம்முறை கௌன்ஸிலின்தேசாற்றம் விசேஷவனப்பு வாய்க்கிருந்தது. ஒவ்வொரு கௌன்ஸிலிலும் வைஸ் பிரஸிடெண்ட்டும் மற்றும் பல தலைவர்களும் விஜயஞ்செய்வதுடன், விசேஷக் கூட்டங்கள்கூட்ட அவசியம் நேர்ந்தால் கூட்டவும் செய்து சமூக வேலைகளைக் கவனித்துக்கொண்டால் காரியதரிசி முதலிய நிர்வாகஸ்தர்களுக்கு மிகுந்த ஊக்கமு மேற்பட்டு உற்சாகமாக வேலைகளும் நடைபெறக்கூடும். நிர்வாகிகள் மீது ஜனங்கள் தப்பர்த்தங்கொள்ள இடமே யிராது. நிர்வாகிகள் தங்கள் கடமையைத் தவறின்றிச் செய்து வந்திருந்தாலும்மற்றுந் தலைவர்கள் ஒத்துழைப்புச் சிறிது மிராமற்போகவே சங்க வேலை சுறுசுறுப்பாய் நடைபெறவில்லை. குடந்தையில் மகாநாடு நடந்தேறினால் எல்லாகஸ்காரியங்களும் விக்கினமின்றி நடக்குமென்று நம்புகிறோம். தஞ்சை ஜில்லா நாடார் குலாபிமானிகள் நமது சங்கத்தை நன்கு கவனிப்பார்களாக.

குறிப்புகள்.

சத்தியமூர்த்தியின் தியாகம்.

இராமநாதபுரத்தில் திரு. சத்தியமூர்த்தி பேசும்போது மந்திரி வேலைக்காக பணகால் ராஜா வர்னரின் அந்தரங்கக் காரியதரிசியின் பல்லாவைச் சுற்றித்திரிவதாகவும் தாம் அதை துச்சமென வெறுத்துத்தள்ளிவிட்டதாகவுங்கூறியதாய்த் தெரிகிறது. சபாஷ் சத்தியமூர்த்தி! எவ்வளவு தியாகம்பார்த்தீர்களா? முதலாவது சத்தியமூர்த்தி பிராமணர்; அதனால் அவருக்குப் பொருளில் பற்றுக்கிடையாது. இரண்டாவது தேசாபிமானி; ஆனால் மந்திரி உத்தியோகம் பெற்று தேசமக்களின் பணத்தை சம்பளமாக வாங்கி தேசத்துக்கு நன்மை செய்யமுடியாத நிலைமையிலிருப்பது தேசத்துரோகம், மூன்றாவது சத்தியவந்தர்; ஆகையால் ஒட்டர்களிடத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் பின் வாங்கக் கூடாது. இவ்வளவும் பொருத்தமானதல்லவா? இவ்விதமிருக்க சட்டசபைக் கலைத்தலைவர் தேர்தலில் தமக்குத் தோல்வியேற்படுதற்கு வருந்துவானேன் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிடாதீர்கள். அந்தக் காரணம் வேறு. சொல்லியாகவேணுமானால் சொல்லிவிடுகிறோம். சென்னைச் சட்டசபையின் சுயராஜ்ஜியக்கட்சித் தலைவராயிருந்த திரு. நாயிம்மராஜு சட்டசபைத்தலைவராகத்தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டதால் கலைத்தலைவர் தேர்தல் நடந்தது. திரு. சாமிவெங்கிடாசலஞ்செட்டியார் தலைவராகவும் திரு. கோடிரெட்டி உபதலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். திரு. சத்தியமூர்த்தி சோல்லியுற்றார். இது சகஜந்தானே என்று விலருக்குப்படலாம். சென்னை மகாணத்துக்கு மந்திரிகள் மூன்றுபேரென்பதையும், சுயராஜ்ஜியக்கட்சியொரு மந்திரி சபையமைக்கும்படி அதன் தலைவரை கவர்னர் கூப்பிட்டுக் கேட்கவேண்டிய சந்தர்ப்பத்தில் "சுதேசமித்திரன்" கௌரத்தி கான்கிரஸ்வரையும் பொறுத்திருக்கும்படி யோசனை சொல்லியதையும் சேர்த்து யோசித்துப் பாருங்கள். மந்திரியின் சம்பளம் மாசம் 1-க்கு ரூ 5000 அல்லவா? இப்போது தான் சத்தியமூர்த்தியின் உண்மைத் தியாகம் புலப்படும். கௌரத்தி காங்கிரஸ் உத்தியோகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நிர்மானித்தால் கக்கிகளின் கொள்கைப்படி மேலேயுள்ள மூன்று தலைவர்களுந் தான் மந்திரிகளாகவரலாம். இதற்காகத்தான் திரு. சத்தியமூர்த்தி வருந்கியது. அடுத்த உறவினரையாதரிப்பதில் வல்லவரான காங்கிரஸ் தலைவர் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் உடனே திரு. கோடிரெட்டியை உபதலைவர்பதவியை ராஜிநாமாச்செய்யும்படி செய்து திரு. சத்தியமூர்த்தியை உபத்தலைவராகச் செய்துவிட்டார். இதுதான் 5000 ரூபாயை துச்சமென ஒதுக்கிவிட்ட திரு. சத்தியமூர்த்தியின் தியாகம். பாவி காங்கிரசுக்குக் கண்ணில்லையே!

பெரிய இடத்துப்பேச்சு.

காங்கிரஸ் தலைவர் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் தாத்துக்குடியில் பேசும்போது சுயராஜ்ஜியக்கட்சியாரைப் பார்த்து "சென்றபொதுத் தேர்தலில்காங்கிரஸ்வாதின் அபஜெயமுற்றதற் ஒருவிதத்தில் உங்களுக்கு அநுகூலமாயிற்று. காங்கிரஸை பலப்படுத்த நீங்கள் முயற்சி செய்ய அது காரணமாயிருந்தது. தேர்தலில் தோல்வியுற்றதற்குத் தகுந்த சாந்தி செய்துவிட்டீர்கள். சட்டசபையில் சில சமையங்களில் பிரதிநிதிகள் ஒருவிதமாக நடந்து கொண்டிருக்கலாம். சபைகளில் ஸ்தானம் பெறுவதால் தேசியலட்சியமாகிய சுயராஜ்ஜியம் கிட்டிவிடுமென்று எதிர்பார்த்து அங்கு செல்லவில்லையென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று சொன்னாராம். தலைவருக்கு இந்த ஞானம் எவ்வளவு நாளாய் உண்டாயிற்றென்று கேட்கிறோம். சட்டசபைகளால் யாதொரு நன்மையுமுண்டாகாதென்றே மஹாத்மாகாந்தியடிகள் சட்டசபை பஹிஷ்காரத்தை காங்கிரஸில் கொண்டுவந்து நிறைவேற்றினார். அவர் அன்று சொன்னவார்த்தையை திரு. அய்யங்கார் அறிந்துகொள்ள இவ்வளவு காலஞ் சென்றிருக்கவேண்டுமா? அய்யங்காரைப் போன்றவர்கள் மஹாத்மாவின் ஒவ்வொரு தத்துவத்தையும் அறிந்து கொள்ள எவ்வளவு காலஞ்செல்லுமோ தெரியவில்லை. ஒரு வேளை காங்கிரஸ் தலைவர் தேசத்தின் பேரால் செய்யப்படும் கெடுதிகளைத் தடுக்கவாமென்று சொல்லலாம். ஒத்துழையாக் காங்கிரஸைக்கொன்ற சுயராஜ்ஜியக்கட்சியார் எந்தத் நீமையை சட்டசபையிலிருந்து விலக்கியிருக்கிறார்கள்? வங்காள அவசரச்சட்டத்தை ரத்துச் செய்து விசாரணையின்றி வாடுகிறவர்களை விடுதலை செய்து விடும்படி செய்தார்களா? நாணயமற்றவிலைத்தை ரூபாய்க்கு 18 பென்ஸ் விகிதத்திலிருந்து 16 பென்ஸாக்கி நிர்மானித்து தேசத்தின் செல்வத்தை வடிகட்டுவதைத் தடுத்தார்களா? இந்தியாவில் தங்க நாணயத்தை லெவாணிக்குக் கொண்டு வந்தார்களா? இந்திய சைன்யத்தை இந்தியமயமாக்க சட்டஞ்செய்து விட்டார்களா? இந்தியாவுக்கு தனிக் கடற்படை ஏற்படுத்தியதைத் தடுத்து செலவைக் குறைத்துவிட்டார்களா? கடற்படை அவசியமெனின் பாதிப் பேர்களாவது இந்தியர்களாயிருக்க ஏற்பாடு செய்தார்களா? சேனாதிபதியாதினை அடக்க இந்தியத் திருப்படைகளை அனுப்பக்கூடாதென்று தடுத்து விட்டார்களா? இந்தியர்களைத் சேனாதிபதிகளாக ஏற்கச்செய்கும்படி குடியேற்ற நாடுகளுக்கு ஏகாதிபத்திய சட்டமியாபாரச்சலுகையில்லாமல் தடுத்துவிட்டார்களா? எந்த உருவான வேலையைச்செய்து முடித்திருக்கிறார்கள். இவர்களால் நிராகரிக்கப்பட்டு விரிவு சேலவு திட்டம் கவர்னர் ஜெனரலின் விசேஷ அதிகாரத்தின் மேல் அங்கீகாரம் பெற்று கவர்ன்மெண்டின் இஷ்டம்போல் நடக்கவில்லையா? இவர்களால் குறைந்தபக்ஷமாய்க் கோரப்பட்ட சர்வ கக்ஷியாரும் தயாரித்து நிறைவேற்றியதிட்டம் நடத்தி வைக்கப்பட்டதா? ஒன்றுமே செய்ய முடியாத நிலைமையில் பத்திரிகைகளில் நீளம் நீளமாய் சட்டசபையைப்பற்றி எழுதுவதாலும் பேசுவதாலும் பிரயோசனமென்ன? மஹாத்மாகாந்தியடிகளின் நிர்மாணத்திட்டத்தைநடத்தி வைத்திருந்தால் சுயராஜ்ஜிய பட்டையில் எவ்வளவு தாஞ் சென்றிருக்கலாமென்றே திரு. அய்யங்காரை வினவுகிறோம்.

காங்கிரஸும் நதரும்.

தேச சுகத்துக்காக ஸ்திரமேயில் தங்கியிருக்கும் மகாத்மாகாந்தியடிகளை காங்கிரஸ் தலைவர் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் சந்தித்து காங்கிரஸ்காரர் கட்டாயம் கதர் கட்டவேணுமென்ற நிபந்தனையை தளர்த்திவிடலாமா? என்று கேட்டாராம். மகாத்மா, ஒன்று நீர் மானப்படி நடக்கவேண்டும் அல்லது நீர்மானமே வேண்டாமென்றாராம். தலைவர் என்ன செய்வார்பாவம்! சென்னையில் காங்கிரஸைக் கூட்ட வேண்டும். 2 லட்சம் ரூபாய் வேண்டுமாம். சென்னைமாகாணத்தில் காங்கிரஸின் செல்வாக்கு குறைந்துவிட்டது. பிராமணர்களின் முக்கியமாய் காங்கிரஸ் பிராமணர்களின் குட்டியைச் சகிக்கமுடியாமல் பிராமணரல்லாதார் சுயமரியாதைக்காகப் பாடுபடும் போது காங்கிரஸ் நடப்பதற்காக யார் பணங் கொடுப்பார்கள்? இதற்காக புதுவழியொன்று கண்டுபிடிக்கவேண்டும் அல்லது மானங்கெட்டுப்போகும். கதர் நிபந்தனையை தளர்த்திவிட்டால் பார்ப்பன வக்கீல்களெல்லாம் மெம்பர்களாகவும் வரவேற்புக்கமிட்டியாராகவும் சேர்ந்து திரு. அய்யங்காரின் மதிப்புக்குப்பங்கம்வாராமல் செய்துவிடுவார்கள். பணங்கொடுப்பதற்குத் தக்கபடி தங்கள் ஜாதியார் பிரயோசனமடையவும் காங்கிரஸ் மூலம் வழியேற்படும். பழையபம்பிராயம் அதல்லவா? பாவம் மஹாத்மாகாந்தியும் பார்ப்பனர் குழ்ச்சியை அறிந்து கொண்டார்போலும்! அதனாலேயே திரு. அய்யங்காருக்கு இணங்காமல் பதில் சொல்லிவிட்டார்.

பள்ளிக்கு வைக்க உள்ளதும் பேச்சு

என்பது பழமொழி. அதுபோல் சுயராஜ்ஜியக்கட்சியார் காங்கிரஸிலிருந்து முதலில் ஒத்துழையாமையைத் தொலைத்தனர். நிர்மாணத்திட்டத்தை கொஞ்சங்கொஞ்சமாய்ப் புறக்கணித்தனர். கடைசியாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக வெகுபாடுபட்டு அதில் இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கலப்புத்தொகுதியால் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்று நிர்மானித்தனர். அதனால் விளைந்த பிரயோஜனம் ஏதாவதுண்டா? எட்டுக் நாலைக்காய் கறிக்காகாதுபோல நிர்மானமுமிருக்கிறது. இதற்கு முன்னாவது ஹிந்து முஸ்லீம் தலைவர்கள் பகிரங்கப்பண்டிகை காலதாதில் கலவரம் கடவாமல் தடுக்க முயற்சிதிருப்பார்கள். இப்போதுஎன்னடக்கிறது தெரியுமா? தில்லி, கல்கத்தா முதலியவிடங்களில் ஒருபுறம் ஆயுதபாணிகளாய் காவல் செய்து கலவம்வாராமல் தடுக்கின்றன. தலைவர்களெங்கே? அவர்களின் கலப்புத் தொகுதி முயற்சி வெங்கே? இப்போதுள்ள நிலைமை மூன்றாவதொரு பலவான் வேண்டுமென்று சொல்வது போலில்லையா? துப்பாக்கியும் சட்டியும் இல்லாவிடில் இவ்வருஷம் நாடு எங்கேயடைந்திருக்குமோ யாக்கண்டார்? காங்கிரஸ் தலைவரும் பெருங் காரியதரிசி திரு. எ. ரெங்கசாமிஅய்யங்காரும், திரு. சத்தியமூர்த்தியும், திரு. எம். கே. ஆச்சாரியும் யாதுசெய்கின்றனர்? பேச்சளவில் காரியம் முடிந்துவிட்டதாகக் கனவு காணுகிறார்கள் போலும்.

ஒன்றை ஸ்தாபிப்பதில் பிரயாசையின்று; அதனாலாகும் பயனைப் பெறுகிறோமா என்பதிற்றான் நமது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

திக்குவிஷயம்.

ஐரோப்பிய கலி வாணர்களில் 100-க்கு 70 பேர் நோயாளிகளாம்.

* * *

சென் திருவாங்கூரில் நங்கள் சமுதாயக் கூட்டங்கூட மீடு சமமறுத்த ஒரு பார்ப்பனரேனும், வாகரம் வசிக்க வாரமறுத்த மேனக்காரனுடனும் வணனார்கள் ஒத்துழையாமை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

* * *

விருதுநகர்—தென்காசி இரயிற்பாதையை சென்னை கவர்னர் வெகு ஆடம்பரமாய் 29—6—27ல் திறந்து வைத்தார். அதுசமயம் இராமநாதபுரம் ராஜா, டாக்டர் சுப்பராயன், ஸர். முத்தையா செட்டியாரியவர்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

* * *

சட்டை ஜேப்பில் வைத்துக்கொள்ளும்படியாக நூல் நூற்கும் ராட்டினம் வடநாட்டில் புழங்கிவருகிறது. இதன்பெயர் தக்லி.

* * *

இந்தியாவில் மொத்தம் 50 லட்சம் ஓட்டர்களே யிருக்கின்றனராம்:

* * *

சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 427 லட்சம். 1901ம் ஆண்டில் 330 லட்சம் பேர்களே அகவை 16 வயதிற்கு மேற்பட்டவர்களாய கல்வி வாசனை அறியாதிருந்தனர். ஆனால் 1921 - 390 லட்சம்பேர்கள் அகவை 16-வயதிற்கு மேற்பட்டவர்களாய் எழுத்வாசனையறிந்தவர்களாய் இருந்தனர்.

* * *

இங்கிலாந்தில் மட்டும் தற்போது 4500 ரிகஷாவண்டிகள் இருக்கின்றனவாம். அதிகமான ரிக்ஷா நடமாட்டத்தால் உயிர்சேதம் மிகுதியும் நேர்ந்து வருவதாலும் இதனால் ஜீவராசிணமற்ற சென்டிரை யுண்டாக்கும் 1931வது வருடத்திற்குள் பூரா ரிக்ஷாவையும் ஒழிக்கவல்ல கவர்ன்மெண்டார் உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

* * *

மலையாளம், பொன்னானியில் கம்பூரிலிருப்பைச் சேர்ந்த விதவையான ஒரு இளம்பெண் ஒரு நம்பூதிரி இளைஞனால் ஒருவர்க்கும் தெரியாமல் ஓடிவிட்டாள். இக்குற்றத்திற்காக ஜாதிக்கட்டம் கூடி அப்பெண்ணுடைய தாயை ஜாதிப்பிரஷ்டம் செய்திருக்கின்றனராம்.

* * *

ஆண்மகனுக்கோப்பவும் அதிகமாகவும் சுவாதந்திரியும் பெண்மக்களுக்குச் சென்னை லிலீரும் இலவொந்தியுள்ள ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் சேரும் மாணவர்களின் தொகையில் நாலில் ஒருபங்குதான் மாணவிகள் சேர்க்கப்படவேணுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இது என்ன கோக்கோ!

* * *

அமாமிறுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்து தரை கூலிஸ்திரியை காதலித்தார். இருவர்க்கும் தரைக்குழந்தை பிறந்தது. பெண்வியாதியுற தரை கைவிட்டார். பெண்தரை மீது வியாஜ்ஜியம் தொடுத்தாள். எவ்வளவோ வாதாடியும் மாதம் இருபது ரூபாய் கொடுக்கும்படியாய் தீர்ப்பாயிற்று.

* * *

சத்தியாக்கிரகம் நடத்துவதில் ஆர்வங்கொண்ட ஸ்ரீ சோமயாஜுலு அவர்களும் ஸ்ரீபத்மனெரியம்மாளுன்பட பலரும் ராஜீயக் கைதிகளை விடுவிக்கும்வரை வாளேந்தி கவர்னரை வருவதெனத் தீர்மானித்து 16-ந்தேதி முதல் மதுரையில் நடத்திவருகிறார்களாம்.

* * *

இத்தாலியில் முஸோலினியின் பாலிஸ்ட் கொள்கைப்படி ஸ்தாபிதமாகும் சங்கங்களில் சேரும் ஒவ்வொருவரிடியும் இத்தாலியர்களால செய்யப்படாத சாமானகளை வாக்குவதில்லையென்று பிரதிகளை செய்கிறார்களாம்.

ரசத் திரட்டு.

வழியாவில் மறுப்பு எனும் தலைப்பில் கீழ் காணப்படும் கருத்தாவது:—

இல்லையென்று நாம் கூறுவதை மறுப்பெழுதும் கண்பர்கள் ஏற்க வேண்டுமென்பது என்ன நியாயி? இது சட்டமா? இதை மீறினால் தண்டனையா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எனவே, அவரவர் இஷ்டப்படி செய்ய, எல்லாருக்கும் உரிமையுண்டு. கடவுளாற் படைக்கப்பட்ட மனிதர்களுள் சமமரியாதை எவருக்கு இல்லை? இன்னொருவர் சொல்வதைக் கேட்பது தம் சுயமரியாதைக்குக் குறைவு எனச் சில அன்பர்கள் நினைக்கலாம். அஃதுண்மைதான். அதிகார வலிமையால் ஆணையிடப்படாத காரியங்களைத் தைரியமாகச் செய்ய எல்லோர்க்கும் உரிமையிருந்தபோதிலும், அவை செய்யத்தக்கனவே என விவாதமுறையில் நக்க காரணத்தோடு காட்டினால் ஒழிய, அறிவு உலகம் ஏற்காதன்றோ? இவ்வுண்மையைப் பலர் உணர்வாரானால், மறப்பு முறை இன்று இருக்கும் இழிவான நிலைமையில் இருக்கமாட்டாது.

ரெவரெண்டு ஏச். ஏ. பாப்லி அவர்கள் இந்து பத்திரிகையில் கல்வி விஷயமாய் குறிப்பிட்டிருப்பதின் ரசமாவது:—

வயதுவந்தவர் கல்விமுறை இந்தியாவில் மூன்று விதங்களாக நடத்தப்படவேண்டும். கல்வி வாசனை இல்லா

* * *

லிவர்பூலிலும் மான்செஸ்டரிலும் 98 வருடங்களுக்கு முன் ஜனங்கள் ரெயிலில் பிரயாணம் செய்யப் பயப்பட்டார்களாம். இக்கூச்சத்தைத் தெளிவிக்க ஜனங்களுக்கு பணம் கொடுத்தும் பிரயாணம் செய்ய கம்பெனியார் ஏற்பாடு செய்தார்களாம்.

* * *

குளவிகளுக்குக் காதிதம் செய்ய முடியுமாம். வைக்கோல்கொண்டு அவைகள் செய்வதை யறிந்தே மன்கோலியர்கள் முதன் முதலாக காதிதம் செய்ய முன்வந்தார்களாம்.

* * *

ஸ்தூல (பருத்த) திரேகினாய்க்கூடிமிலான் நகரத்தில் ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்களாம். நச்சுவத்தின் தலைவர்பெயர் ஜோர்கார்லோரி ராட்டா. இவர் 600 ராத்தல் எடையிருக்கிறாராம்.

* * *

ஒரு ஐரோப்பியன் கல்கத்தாவில் போலீஸ் அதிகாரிபோல் நடித்து ஒரு மார்வாரியிடம் ரூ 2000 கைப்பற்றிச் சென்றுவிட்டான்.

* * *

மதுரையில் வைக்கக்காரத்தெருவில் வசிக்கும் பலிஜஜாதியைச் சேர்ந்த ஒரு பெண் தன் 10-வது வயதில் மணம்நடக்கவன், தான் ருதுவாவதற்கு முன்னால் கறியடைந்த படியால் ருதுவானபின்னர் சமீபத்தில் மறுமணம் செய்துகொண்டாள்.

* * *

டில்லி சப்போஸ்டு மாஸ்டர் கேவிஸ்பாக் பணத்திலிருந்து கமார் லக்ஷம் ரூபாய்களை கையடிக்கொண்டு எங்கேயோ சென்றுவிட்டாரத் தெரிகிறது. அவரைப்பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூ 50 இனாம் கொடுப்பதாக தபால் அதிகாரி அறிக்கை விட்டிருக்கிறார்.

* * *

ஆகாய விமானத்திலேற்றி 10 நிமிஷம் வரை கல்கத்தாநகரைச் சுட்டுக்கிட்டணம் ரூபாய் இருபதாம். செவ்வாய்கால மாலையில் தமாஷாகப் பிரயாணம் செய்கிறார்கள்.

* * *

தஞ்சாசஜில்லா போர்டு உபயோகத்திற்கு தரேர் வாங்கவேண்டுமென்றும் ஜில்லா போர்டு பட்டாசாலைகளில் நூல் நூற்கப்பயிற்றுவிக்க வேண்டுமென்றும் மகாத்மா காந்தியை வரவேற்க வேண்டுமென்றும் ஜில்லாபோர்டு கூட்டத் தீர்மானம்.

திருக்கும் நிலைமையைப் போக்கவும், விஷயங்களின் தாராதரத்தை உணர்ந்து கொள்ளும் சக்தியினைப் பெருக்கவும் கல்வி வாசனையே யறியாத வயதுவந்தவர்களுக்குக் கல்வி புகட்டுவதும் முதலாவதாகும். ஆரம்பக்கல்வி புகட்டுவதும் ஒவ்வொரு விஷயத்தில் ஆராய்ச்சிசெய்வதும் இரண்டாவதாகும். சர்வகலாசாலைக் கல்வியாவரும் பெறும்படி சர்வகலாசாலைகளைப் பெருக்கும் இயக்கம் ஏற்படுத்துவது மூன்றாவதாகும். இம்மூன்று வழிகளிலும் இந்தியா யாவற்றையும் புதிதாகத்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. புதிய முறைகளைக் காணவேண்டியிருக்கிறது. என், எழுத்து, படித்தல் ஆகிய மூன்றோடு மட்டும் வயதுவந்தவர் கல்வி இயக்கத்தை நிறுத்திவிடக் கூடாது. வாழ்க்கை முழுதுக்கும் பயன்படக்கூடியதாயும், ஆடவர்களும் பெண்டிரும் சமூக விஷயங்களைப்பற்றிய புதிய அபிப்பிராயங்கொள்ளும்படி செய்ய உதவுவதாயும் கல்வி குடிமக்கள் தன்மையைப் பெருக்குவதாகவும் இருக்கவேண்டும். பலநாடுகளில் அவ்வாறே அவ்வியக்கம் செய்திருக்கின்றது.

திரு. பழ. சுந்தரேசன் அவர்கள் 'வசக்தி'யில் விபசாரவிலக்கு என்பதுபற்றி பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

மதுபானஞ் செய்யும் ஒருவன் தன் சம்பாத்தியத்தின் ஒரு பகுதியையே மதுவிற்கென விரயஞ்செய்கிறான். விபசாரபுருஷனோ தன் சம்பாத்தியத்தோடல்லாது தனது மூதாதையர் வைத்துள்ள பொருள்களையும் விற்று விபசாரஞ்செய்கிறான். விபசாரிகள் தங்கள் சோர்தைப் பெரும்பாலும் குதாட்டங்களிலும் மது மாமிசங்களையுண்டு களியாடல் புரிவதிலுமே கழிக்கிறார்கள். எனவே, விபசாரிகள் இல்லத்தை நாடும் ஒருவன் எல்லாவித பாவங்களையும் செய்ய ஏதுவாகிறது. ஒரு பிரம்மசாரி எவ்வளவு வாசித்தவனாயினும் பருவமடைந்தவுடன் விவாகம் செய்யப்படாவிடின் விபசாரிகளின் பாழுங்கிணற்றில் விழவேண்டியதாகிறது. எப்படி? படித்த ஒருவன் இவர்களைத் தேடி அவர்களின் வீட்டிற்குப் போகவேண்டுவதில்லை. விபசாரத்தினின்றும் தப்பவேண்டுமானால் இப்பொழுதுள்ள தேவாலயங்களுக்குச் செல்லாமலிருந்தாலே ஒருவாறு அவர்கள் வலையினின்றும் விலகிக்கொள்வதாகும். பல கோயில்களில் கோயில் பெரியதிகளே விபசாரிகளின் தாகர்களாயிருப்பது முற்றிலும் உண்மையாகும்.

இத்துடன் சட்டசபையில் இது பற்றி ஒரு சட்ட மியற்றப்பெறின் பெரிதும் நன்மைபயப்பதாக விருக்கலாம். அதாவது 14 வயதுக்கு மேல் 18 வயதிற்குள் ஒவ்வொரு பெண்ணும் 21 வயதிற்குமேல் 26 வயதிற்குள் ஒவ்வோர் ஆணும் அவசியம் விவாகம் செய்து கொள்ளாதிருந்தால் அதற்குச் சரியான காரணம் நிரூபிக்கப் பெறவேண்டும். இல்லையேல் அவ்வயதினரிற்கு மேல் கலியாணம் செய்வதும் குற்றமாகக் கருதப்பெற்று அதற்குத் தண்டனைகளும் விதிக்கப்பெற்றால் அதனால் விபசாரம் ஒருவாறு ஒழிவதோடு பிற்கால சந்ததியாராவது திடசரீர முடையவர்களாவார்கள்.

ஸ்ரீ அரு. சோம. அவர்கள் "குமரனில்" பின் வருமாறு எழுதுகிறார்.

அரசியல் பாராப்பனரிற் சிலர் சீர்திருத்த இயக்கத்தை வெறுப்பது பார்ப்பனச் சூழ்ச்சி எண்ணத்தினாலேயே. இப்பேர்ப்பட்ட தேசமிருக்கும் சிக்கலான நிலைமையில் சுயராஜ்ய சீர்திருத்தம், சமய சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம், பார்ப்பனியத்தை ஒழித்தல் ஆகிய நான்கு இயக்கங்களும் இன்றியமையாதனவே. இதுவே பரிங்கு போர் கண்ணகற்ற மனமுடைய ஈ. வெ. ராமசாமி நாயக்கரது எண்ணம். இந்தியாவின் நல்வாழ்விற்குச் சீர்திருத்தங்கள் இன்றியமையாதென்னுங்கருத்தை பிரபல திருத்தக்காரரும் பெரியோருமான தயானந்தர், ராஜாராம் மோகன்ராய், காந்தியடிகள், ஜஸ்டிஸ் கோபாலகிருஷ்ணதேவ ஆகியவர்கள் சான்றாகக் கொள்ளுகின்றார்கள். சீர்திருத்தமே சுயராஜ்ய அடைவிற்கு [illegible]

விருதுநகர் பால்ய நாடார் சங்கம், 3-வது ஆண்டு பூர்த்தி விழா.

ஷை விழா (26—6—27) மாலை 5-30-மணிக்கு ஷத்திரிய மேயர் பெண்பாடசாலையில் காரதுர் வக்கீல் ஸ்ரீமான் டி. எல். கந்தசாமி முதலியார் பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ் நடந்தேறியது. அங்கவம் ஏராளமான ஜனங்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

தலைவர் அவர்கள் முகவுரையாகத் தற்காலம் வாலிபர்கள் தேசிய விஷயங்களில் ஈடுபடக்கூடாதென்றும், குல சேவையே மிகச் சிறந்ததென்றும் அதற்கொவ்வ இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் குல முன்னேற்றத்திற்காக பாடுபடுதல்வேண்டுமெனக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து தான் அரிலிருந்து ஆனந்தம் அடைவதாகவும் சொல்லி ஆசனத்தில் அமர்ந்தார்.

அதன்பின் ஸ்ரீமான்கள்:-பி. சொக்கலிங்கம் என்பார் "அன்பு" பி. புஷ்பவனம் அவர்கள் "மது ஜெயபூமி" எஸ். வெங்கிட்டசாமி நாடார் அவர்கள் "திருக்குறள்" வி. பெ. சி. வ. பிரகாசம் அவர்கள் "தற்கால ராஜீய நிலைமை" எஸ். பழனிச்சாமி அவர்கள் "நமது கடமை" என்னும் விஷயங்கள் பற்றி முறையே சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

முடிவுரையாக தக்கிராசனர் அவர்கள் எழுந்து நமது சென்மபூமி திருக்குறள் ஆகிய விஷயங்கள்பற்றி மிக்க தெளிவாக எடுத்துக்கூறினார். பின் தற்கால ராஜீய நிலைமை என்னும் விஷயத்தைப்பற்றிக் கூறும்போது தேர்தல் காலத்தில் வாக்குமுறி செய்ய சுயராஜ்யக்கட்சியின் மோசடியை ஜனங்கள் அறிந்துகொண்டார்களெனவும், காங்கிரஸ் என்ற மந்திரத்தை வைத்துக்கொண்டு ஒரு சார்பார் ஏமாற்றிவருகிறார்கள் என்பது உலகமறிந்த விஷயமென்றும், ஸ்ரீமான் வி. பெ. சி. வ. பிரகாசம் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியினர் உத்தியோக வேட்டைக்காரர் என்றும், அதன் உண்மையை மாயவரம் மகாநாட்டில் தலைமை வகித்திருந்தவரே ஒப்புக்கொண்டுவிட்டாரென்றும் சொன்னார். அதுயாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கிய விஷயமே. ஆனால் காங்கிரஸ் கட்சியினர்களோ உத்தியோகம் ஏற்றுக் கொள்வதில்லை என்று கொல்லிக்கொண்டு திருட்டுத்தனமாய் உத்தியோக வேட்டை ஆடிவருகிறார்கள். இதிலிருந்து யார் யோக்கியர் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இன்னும் முன் இருந்த மந்திரிகளைக் குறைகூறி வந்த சுயராஜ்யக்கட்சியினர் இப்போது இருக்கும் மந்திரிகளை ஆதரித்தவருகிறார்கள். முன் இருந்த மந்திரிகள் மாதம் 1-க்கு சம்பளம் ரூ 5000—0—0. க்கு ரூ 4000—0—0 வாங்கினார், இப்பொழுது இருக்கும் மந்திரிகளோ மாதம் ரூ 5000—0—0 வாங்கி வருகிறார்கள். முன் இருந்த மந்திரிகளைப் பார்க்கிலும் இப்போதிருக்கும் மந்திரிகள் எவ்விதத்தில் லொக்கியமுடையவர்கள் என்றுதான் கேட்கிறேன். தற்போது மூக்கு விடுவதற்கும், தண்ணீர் குடிப்பதற்கும் கதந்தரமில்லாதநாம் மக்களுக்கு இப்போது சுயராஜ்யம் எதற்கு? சுயமரியாதையின்றி சுயராஜ்யம் கிட்டுமென்பது வியர்த்தமே. சுகந்தரம் பெற்றுவிட்டால் சுயராஜ்யம் தானாகவே வரும் என்று சொல்லி அதன் பின் வது கடமை என்னும் விஷயத்தைப் பேசினது முடிவுரையை முடித்தார். தலைவர் அவர்களுக்கு வந்தன உபசாரம் கூறப்பட்டு இரவு 9-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி தெ. சி. கா. ராமசாமி எழுதுகிறார்.

ஐரோப்பாவில் சீர்திருத்த இயக்கம் தோன்றிப் பயன் தந்த பின்னரே அரசியல் இயக்கம் உலாவத்தொடங்கியதாரின் சீர்திருத்தக் கொள்கையே அந்நாட்டைக் கண்விழிக்கச்செய்தது. அலை ஓய்ந்து நீராடுதல் என்ற உவமானத்தால் சீர்திருத்த இயக்கங்களை பிரமாணர் வெறுக்கிறார். சீர்திருத்த இயக்கம் இப்பொழுது நமக்கு ஆரம்பமாகிப் பயன்பெறத்தக்கதாகும். ஆனால் சுயராஜ்யமோ எளிதில் பெறத்தக்கதன்று. ஜனக்குழுத்தின் ஒற்றுமை நிலையையும், திருத்த வாழ்வையும் பொறுத்தே சுயராஜ்யப் பேச்சு புலனாகத்தக்கது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

காலச்சக்கரமும், நமது கடமையும்.

பெரியோர்காள்! இந்நாளிலே இருபதாம் நூற்றாண்டின் கண் ஒவ்வொரு சமூகத்தினரும் ஜாதிய சேவையே செய்வீகபூஜை யெனத் தனித்தனி சங்கங்கள் ஏற்படுத்தி சுயமரியாதை அடையவேண்டுமென்கிற ஒரே நோக்கத்துடன் தனித்தும் மற்ற ஜாதியருடன் சேர்ந்தும், தேசீயம், பார்ப்பனீயம் என்று சொல்லிக்கொண்டு பாடுபட்டுவருகிறார் களென்பதை உன்னங்கை நெல்லிக் கனிபோல் அறிந்த இக்காலத்து நம் மகாஜன சங்கமானா விருந்தால் சுயமரியாதை அடைய முடியுமா? அன்றியும் நம் முன்னேற்ற விஷயங்கள் நிர்மானத்தில் இருந்துவந்தால் எட்டுச் சுவரைக் காய் கறிக்கு உதவாதென்னும் முதுமொழியின்படி பிரயோஜன மற்றவைகளென்பது திண்ணம். ஆதலின் காலமாறுபாட்டிற்குத்தகுந்தாற்போல் நம் நிர்மானங்களை மாற்றி அமுலுக்குக்கொண்டுவர முன் வாருங்கள். ஆத்திரியுத்தமர்காள்! நம் சகோதரர்கள் பற்பல இடங்களில் அடையும் இக்கட்டுகளை நீக்கி, ஏழைப்பிள்ளைகளுக்குக் கட்டாயப் படிப்பு கொடுத்து இந்தியாவையும் யாதொரு பாகு பாடின்றி நம் பள்ளிக்கூடங்களில் படிக்கவைத்து அவர்களையும் சேர்த்து நாம் முன்வரப் புறப்படுங்கள். இஃதே தற்காலத்தில் நாம்செய்யவேண்டிய முதற்கடனாகும். அஃது நம் சோர்பிராயங்கள்பட்டி நாடார்கள் அனுஷ்டானத்திற் காட்டி வருவது பாராட்டற்குரியது.

செல்வச் சீமான்களே! செழுங்கிளை தாங்குதல் மனிதர் கடமையென நம்மூதாட்டி சொல்லியிருக்கின்றாளன்றோ? அவ்விதம் செய்யவேண்டாமா? கைத்தொழில் சாலை யேற்படுத்தி நம் சகோதரர்களுக்கு கைத்தொழில் கொடுத்து தியதொழிலில் இறங்காவண்ணம் தலைதாட்கொள்ள வேண்டுமெனத் திர்மானம் செய்தோமே அப்படிச் செய்தோமா? இல்லையேல் இனிமேலாவது கடமையைச் செய்ய முற்துங்கள்.

மான்களே! நம் சமூகத்தினரிடையில் ஐக்கியத்தை ஊட்டி அபிமானம் உண்டாக்குவித்து 'பிரசாரம்' தலைக்கட்டி வரிவசூல் முதலியவைகளைச் செய்வதற்கு தொண்டர்படையே கூடுமாகையால் அவ்விதப் படைகள் ஏற்படுத்த முன்வாருங்கள். அதுதான் நமக்கு ஐக்கியத்தை ஊட்டி சுயமரியாதை அடையச் செய்ய வல்லது. அதுதான் நமக்கு நியாயம், மோக்ஷம், வீரசொர்க்கம் முதலியன அடையச் செய்ய வல்லது. ஆதலின் சென்ற ஆண்டு நடத்தவிட்டுப் போன நம் 11-வது மகாநாட்டை அதிவிரைவில் கூட்டுவித்து அதில் தொண்டர்படை யொன்றையாரம்பிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

திருமங்கலவாசிகளே! நம் 11-வது மகாநாட்டை திருமங்கலத்தில் நடத்தி தொண்டர் படையொன்று ஆரம்பித்து சம் சகோதரர்களுக்கு உங்களின் அரிய தொண்டாற்றுங்கள். பால்யர்களே! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!! "இன்றைக்கிருந்தாரை காணக்கிருப்பரென்று எண்ணவோ இடம் இல்லையே" என்ற கம்தாயுமானார் வாக்கின்படி நம் சடலம் அநித்திய மென அறிந்து நம் கடமையைச் செய்ய முன்வாருங்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில்லார் தோன்றலிலிதோன்றாமைநன்று" என்ற நம் நாயனார் வாக்கின்படி நாம் நமக்கென வாழாமல் பிறருக்கு ஊழியஞ் செய்ய வந்தோமென உணர்ந்து தொண்டாற்றிப்புகழ்பெற முற்துங்கள் முந்துங்கள். நாம் நிர்வாணமாகவே போகிறோமென்பதை உணர்ந்தும் "அத்தமும் வாழ்வும் அத்தமட்டே ...ற்றிச் தொட்டும் இருவினைப்புண்ணியமும் பாவமுமே" என்ற நம் பட்டணத்தடிகளின் வாக்கின்படி நாம் பணம்சுக்கொண்டுபோவதின்று. ஆனால் நாம் செய்கிற பாவபுண்ணியத்தையே கொண்டு போகிறோமாகையால் புண்ணியமாகியதொண்டைச் செய்யத் தொண்டர்படையில் சேர முன்வாருங்கள். தொண்டர்படையானது நம்ம

மானிட சரீரத்திற்கு மாமிச உணவு அவசியமா?

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையிலிருந்து)

கடவுளாலுண்டாக்கப் பட்டிருக்கும் சால ஜீவராசிகளிலும் மானிடர்க்கு மாத்திரம் பகுத்தறிவாகிய விசேஷ அறிவு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நன்மை, இது தீமை; இது அவசியம், இது அனாவசியம்; இது வேண்டும் இது வேண்டாமெனத் தெளிந்து நல்வழியேகி நற்பதவியடையக் கொடுக்கப்பட்டிருக்கும் இப்பகுத்தறிவை நற்கோக்கத்தோடுதான் செலவு செய்கிறோமாவெனச் நிதி செய்தல் நலம். நமக்கு இந்த ஞானுல சரீரம் பண்டைய வினைப்பயனுல் கிடைத்தது. இதன் இயற்கை அனைவருமறிந்ததே. மனிதன் எக்காலத்திலும் மேல்நோக்கி முன்னேறி இருளகிய நரகிதியை விலக்கி, ஞானப்பிரகாசமாகிய வெளிச்சத்திற்கே வேண்டுமே தவிர கீழ் நோக்கிப் பின்னிறங்கல் விவேகமாகாது. கருதியுங்கி அனுபவம் மூன்றையும் துணையாக வைத்துக் கொள்ளவேண்டியதும் கவனிக்கற்பாலது. அரிதாகிய மானிட ஜனனம் பெற்றும் பிறவிப்பிணிக்கு மருந்தளித்து அதைச் சிறிது சிறிதாகவாவது வென்று மேலிடம் பெற முயற்சிக்க வேண்டியதிருக்க பிறவிப் பிணிக்கு உணவளித்து வளர்ப்பது கெட்ட பாம்பை வளர்ப்பதற்கொக்கும்.

மாமிச உணவருந்துவதற்கேற்ப நமக்குடலமையவில்லை. இஃது ஈசனுலமைக்கப்பட்ட இயற்கை. மாமிசத்தைக் காட்டிலும் நமது தேகத்திற்கு உயர்வானருசியான—இனிமையான உணவுகள் அநேகமுண்டு. இறைச்சி யுணவு ஜீரண சக்தியைக் குறைத்து அநேக நோய்களை ஜனிக்கவைக்கிறது.

"மாமிசத்தைச் சரியாகச் சமைத்து சாப்பிடுவதனுல் வியாதியின் கொடுமை சற்று குறைவாயிருந்தாலும் பொதுவாக ஆட்டிறைச்சி, மீன், கோழி முதலிய மாமிசங்களைப் புசிப்பதினுல் அவைகளால் உண்டாகும் ரோகத்திற்குத் தப்பிப்பதற்கில்லை. மாமிசத்திலுள்ள புழுக்கள் சமைத்தகூட்டினுல் இறக்கிறதில்லை. ஜீரணத்தினுலிறந்தாலும் பல தப்பித்துத் தீமையை விளைவித்துக்கொண்டு தானிருக்கும்" என்று ஆங்கில வைத்தியர்களாகிய உப்டன், இங்கிலேயர், மைக்கேல் வில்லியம் ஆகியோர் கூறியிருக்கிறார்கள்.

நம் பண்டைய குரவர்களாகிய தாயுமானவரென்ன! பட்டணத்தடிகளென்ன! திருவள்ளுவரென்ன! பத்திரகிரியாரென்ன! ஒளவை முதலியோர்களெல்லாம் மாமிச உணவை மறக்கவும், கொலையை விலக்கவும் கூறியிருக்கிறார்கள். மாமிச உணவு நிறத்தியதினுல் பல் சம்மந்தமாகவும் குடல் சம்பந்தமாகவுமுள்ள பல பிணிகள் சுகமாகிய அநேகருண்டு. "ஒரு நிரம் நிறையுள்ள வேகவைத்த மாமிசத்துண்டில் 3000 எரோப்புழுக்களும் 2000 அன்ரோப்புழுக்களும் காணப்படுகின்றன. இவைகளில் அன்ரோப் புழுக்கள் விஷத்தன்மை வாய்ந்தது என்று ரீல்ஸ் நேசத்து வைத்திய ராகிய கெல்லோக் என்பவர் புகன்றிருக்கின்றார். இனிமேலாவது அனுவியமான நீமைசெய்யும் உணவுகளை நீக்கி தாயகுணங்கள் நல்கும் இனிய உணவை கைக்கொள்ளல் வேண்டும்.

வருக்கு நியாயம், வீரம், மோக்ஷம் புகழ், முன்னேற்றம், வீரசொர்க்கம் முதலியவையும் சத்தியாக்கிரஹத்தின் மூலமாக அமிசா, தன்னம்பிக்கை, தாழ்மை, முதலியவைகளும் அளித்து நம்மை முன்னேற்றமடையச் செய்வதால், உடல், பொருள், ஆவி, மூன்றையும் தத்தம் செய்வோமாக.

ப. வே. ச. பழனிச்சாமி,
விருதுநகர்.

விகடத் துணுக்குகள்.

ஞானசூன்யன்—அடே மூடகோமணியே! உங்கள் வீட்டில் அழுகுரல் கேட்டதே; இறந்தது நீயா உன் அண்ணனா?

மூடன்—என்னடாப்பா! நான் இறந்தேனென்றால் அழுவதற்கு உன்னையும் விட்டால் வீட்டிற்குக் கூட்டிப் போகிறேனாமாட்டேனா?

குணவதி—அடியே நிர்மூலி! உன் மாமியிடம் நாக்கப்பாவமாயிருக்கிறதடி. நன்றாய்க்குளித்து ஊத்திகாப்பாற்றிவிடி.

நி. மூ.—ஆமடி; எனக்கும் பாவமாய்த்தானிருக்கிறது. நீ சொன்னபடி கன்றாய்க்குளியே ஊத்திக் காப்பாற்றப் போகிறனுகையால் மெல்லுவதற்கு அவலெயினியும் தாராளமாய் மடியேனிருக்கவும் அவன் பலனையின்று. உனக்கு தலவிலிகிறேன்.

சமரசன்—ஐயா வைதீகரே! எங்கு போகிறீர்கள்?

வை—எட்டி நின்றுகேள்; கிட்ட வாராதே.

சம—ஏன் ஐயா வெளிக்குப்போன விடத்தில் ஏதும் அசுத்தமாத்து கேர்ந்து விட்டதோ?

வை—துஷ்டா! எங்கே என்னைத் தொட்டவந்த விடுவாயோ என்பதற்காகச் சொன்னேன்.

சம—பதிவிரதையோ! தொட்டால் நீர்தெளிவேன். கொடுத்து வைத்த பாக்கியவான் உன் கணவன். அவன் யாரம்மா?

வை—பெண்ணொன்றுடா மதிக்கதாய் முட்டாள்பயலே!

சம—பெண்ணென மதிக்கேனென்ற சங்கொன வந்த பெரியவரே! என்னையும் உம்மைப்போன்ற மனிதர்தானே என மதியாது கிட்டவாராதே என்று செல்லிய உம்தாளைச் சுட்டெரித்தாலென்ன?

வை—ஏது இவன் சப்பலேறிய வனோ!

நாவிதன்—என்னையா! இரண்டு மூன்று ஷவரங்களுக்கு காசு கொடுக்கவில்லையே.

செட்டிக்காரன்—போடா; என்காசுக்கென்னடா? பாக்கி பாக்கியென்று கம்மாக்கலிகிறாய். அம்பட்டப்பயல்களுக்கு குறும்பேறிவிட்டது. தலையில கொம்பு சீவும் பயல்கள் பெருந்தி உன்னைக் கெடுத்திருக்டான்கோ. வேலையைப்பாரடா.

நாவிதன் வேலையைப் பார்த்தான்.

செ—(தலையைத் தடவிப்பார்த்து அங்கு மிகும் மயிர் ஒட்டியிருப்பதைக் கண்டு) என்னடா திட்டும் திடுமாய் விட்டு விட்டாய்?

நாவி—ஆமாம். தங்கள் காகப்பாக்கு இது என்னேலேப்பாக்கி. போய் வாருங்கள்.

எஜமான்—அடே பையா! கேற்று நான் சொல்லிய படி மணியார்டர் செய்துவிட்டாயா?

பை—ஆம் எஜமான்.

எஜ—ரசீதை யெங்கே?

பை—யாரிடம் ரசீது வாங்குவது? நான் சொல்லுவதில் நம்பிக்கையில்லையா? மணியார்டர் பாரத்தையும் பணத்தையும் தபால் பெட்டிக்குள் போட்டு விட்டேனே. இப்போ பாரித்துரம் போயிருக்குமே.

சந்திரசாந்தா—அடி குணவதி! ஏது உன் ஆத்துக்காரருடன் இத்தனை சண்டை?

குணவதி—ஏனக்கா, என்னபண்ணச் சொல்கிறாய்! எனக்கு சத்துருவாயல்லவா இருக்கிறார்.

சந்—என்ன அப்படிச்சொல்கிறாய்! உனது அதிகவியாவது சத்துருவாவது?

குணவதி—உண்மையில் சத்துருவேதான். அவரை யொத்த தோழரைக் கேளுங்களேன். அவர்களெல்லாம் எனக்கு நெம்பவும் வேண்டியவர்கள்.

அரியவுரைகள்.

கல்லொழுக்கம் மன உறுதியினுலும், தன்னடக்கத்தினுலும் ஏற்படக்கூடுமேயன்றி செயற்கைத் தடைகளினுலும் கட்டுப்பாடுகளினுலும், பலவந்தத்தினுலும் ஒருபோதும் ஏற்படாது.

—டாக்டர் ஜி. நாயுடு.

பழைய பழக்க வழக்கங்களான சங்கிலிகளால் பிணைக்கப்படாமல் சேர்மையான போக்கும் நிதான புத்தியுமுடைய புதிய வாலிபர்கள் தான் சமூகத்தை முன்னேற்றக்கூடும்.

—ஷெயார்.

எந்த ஸ்திரீயும், தானும் விவேகத்திலும், ஆதமார்த்த விஷயங்களிலும் உயர் நிலை யெய்த முயலல் வேண்டுவது தனது கடமை என்பதையும், தன்வரையிலும் நாட்டுக்கும் தேசமக்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் பல உள என்பதையும் அறிய வேண்டும்.

—ஷெயார்.

அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் மூழ்கிக்கிடப்பது, ஆதமார்த்த அயிலிருத்திக்கு வழியாகுமென விளம்புவது கேட்டோர்கள் சலித்து விட்டோம்.

—ஷெயார்.

ஐயப்பாடற்ற இந்திய சமூகப் புது அமைப்பின்றி, அரசில் நிருத்தக் கூக்குரலும், சுயராஜ்ய முழக்கமும் வெறுங்கைத் தாள ஒலியேயாகும்.

—டாக்டர் ஹரிசிங் கோர்.

இந்தியா பல நூற்றாண்டுகளாகப் பெரிதும் துன்பப்பட்டிருப்பதன் காரணம், மௌலானாக்கள், மௌல்விகள், சாத்திரிகள், பண்டிதர்கள் ஆகியவர்களின் தொந்தரவேயாகும். நாட்டிலிருந்து தாத்தப்பட வியலாதபோனுல், குறைந்தது அவர்கள் மௌனமாகவாவது இருத்தல் வேண்டும். அவர்களுடைய நீமைதரும் முயற்சிகள் சமய ஆட்சியிற்குள்ளாவது கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

—ஷெயார்.

பல திரட்டு.

சென்னை புரசவாக்கத்திலிருந்த சுவாமி வித்யாரண்யர் வடநாட்டில் பிரயாணமாகிக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட காயத்தால் சில தினங்களுக்குமுன் காலகதியானார். இவர் பி. ஏ. பட்டதாரி; பல பாஷைகளறிந்தவர்; ஸ்ரீ பகவத் கீதையை பிரஞ்ச பாஷையில் எழுதி வந்தவர். ஆனுல் அவர் விரும்பியபடி பூர்த்தியாகி அக்கருவிட வியலாதபோனது வருந்தத்தக்கதே.

இவ்வாண்டிறுதியில் சென்னையில் கூடவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக்கு சர்வ மத சம்மதரெனப் பேர்ந்தப் பெறும் டாக்டர் அன்சாரி அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாமெனச் சொல்லப்படுகிறது.

தெம்பரத்தில் சென்ற வாரத்தில் சில பிராமணர்கள் பசு மத்த யாகம் என்னுமோர் யாகம் நடத்தி மூன்று ஆடுகளைக்கொன்று தின்று விட்டார்களாம். இதென்ன! பிண்டயாகமா?

பெண்களும் தலையிரை வெட்டிக் கொள்ள முற்பட்டுவிட்டதால் இங்கிலாந்தில் அம்பட்டர் கடை பெருகுகிறதாம்.

அமெரிக்காவில் மோட்டார் தொல்லை தாதிகமாயிருப்பதை முன்னிட்டு மோட்டார்களைக் குறைக்கும் வழியாக அவைகளைச் சிறையில் அடைத்து வருகிறார்களாம்.

சக—ஓகோ! அப்படியா சங்கதி? நிருடனுக்கு சந்திரனும் சத்துருதானே!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

எழுத்து உடன் படிக்கையால் யாது பயன்?

மகாத்மா காந்தி சென்ற வாரத்து "ஏஜ் இந்தியா" வில் எழுதியுள்ள தலையங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

அகில இந்தியக் கமிட்டியில் ஹிந்து முஸ்லீம் நிர்மானம் ஏகமனதாக நிறைவேறியதென அச்செய்தி எனக்குத் தந்தி யடித்தபோது நான் உற்சாகங் கொள்ளவில்லை. பிள்ளைகளிடையே கக்கியவைக்கு வந்திருந்தபோது அதைக்குறித்து எழுதும்படி சொன்னார் அவருடைய முயற்சிக்கு உதவியாயிருக்கக் கூடியதெனவும் எழுத முடியுமெனத் தோன்றவில்லையென்று பதிலளித்தேன். இதற்குச் சிலரானைக்கும் பிள்ளை ஒரு கண்பரிடமிருந்து செய்தி யொன்று வந்தது. "சீலைன் லொபத் இயக்கத்தில் ஹிந்துக்களே இழுத்து விட்டதே இப்போது நடக்கும் துயரகரமான சம்பவங்களுக்கெல்லாம் காரணம். நீங்களே எங்களை இப்போது காப்பாற்றவும் முடியும்" என்பது அச்செய்தியின் சாராம்சம். அதைப் படித்ததும். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குறித்து என் நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டுமெனத் தோன்றிற்று.

லொபத் இயக்கத்தில் நான் சம்பந்தப்பட்டதைப் பற்றிச் நெற்றம் வருந்துவேனில்லை. முஸ்லீம்களின் வருங்கால சந்ததியின் ஹிந்துக்களின் நட்புக் கறிகுறியான அச்செயலை நன்றியுடன் நினைவு கூறுவார்கள். வருங்காலம் ஒருபுறமிருக்க, நல்ல காரியமெதற்கும் அதுவே வெகுமதி என்று நான் நம்புகிறேன்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையில் என் நம்பிக்கை நிறைவும் தளர்ச்சியடையவில்லை. என்னுடைய உயிரைக் கொடுப்பதனால் அவ்வொற்றுமை ஏற்படும் என்று தோன்றினால் அவ்வாறு செய்ய எனக்கு விருப்பமும் வலிமையும் உண்டு. உண்ணா விரதமேற்று உயிர் துறப்பதால் ஹிந்து முஸ்லீம்களின் கடின இதயங்களை உருகச் செய்வாரமென்று தோன்றினால் அவ்விரதத்தை மகிழ்ச்சியுடன் அவ்வாறு செய்வேன். ஆனால் என் உள்ளத்தினுள்ளே குடிகொண்டிருக்கும் இறைவன் அவ்வாறு இன்னும் எனக்குக் கட்டளையிடவில்லை. அத்தகைய விரதத்தைக் கொள்வதற்குத் தேவையான தூய்மை இன்னும் நான் பெறவில்லை போலும்.

ஹிந்து முஸ்லீம் நிலைமையைப்பற்றி நான் அடிக்கடி எழுதாததின் காரணம், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லாமை யன்று. அது சம்பந்தமான எனது அபிமானம் வார்த்தைகளால் விவரிக்கக் கூடாததாகி விட்டது. கொடுஞ் செயல் புரிபவர்கள் ஹிந்துக்களாயிருந்தாலும், முஸ்லீம்களாயிருந்தாலும் எனக்கு ஒன்றுதான். நம்மவரில் சிலர் மதத்தின் போர்வை மிருகச் செயல்கள் புரிந்து தெய்வத்தை அவமதிக்கிறது வருவோர்கள் என்பதே போதுமானது. கொலை முதலிய மறச் செயல்களால் மதத்தைக் காப்பாற்ற முடியாதென்றும் நான் அறிவேன். தூய்மை, தாழ்மை, பயமின்மை இவற்றினால் தான் மதத்தைக் காப்பாற்ற முடியும்.

ஆகையினால் தான் அகில இந்தியக் கமிட்டித் நிர்மானத்தை யறிந்து நான் உற்சாகங் கொள்ளவில்லை. நமக்கு இதய மாறுதல் ஏற்பட வில்லையென்று அறிவேன். ஒருவரிடம் ஒருவர் பயத்தையும் நாம் விட்டொழிக்கவில்லை. இந்த இரு நியதிகளினாலும் பூர்த்தியாகாவிடின் எந்த பாழி உடன் படிக்கையும் பயன் தராது.

நம்முடைய சண்டைகளில் மத்தியஸ்தம் செய்யும்படியும், சத்தி முனையில் நமக்குள் சமாதானத்தை நிலை நாட்டும்படியும் அந்நிய அரசாங்கத்தைக் கேட்பது நமது பலவீனத்தின் அறிகுறியாகும். "தலைவர்கள்" என்று சொல்லப்படுவோர்க்குச் சண்டையிடும் ஜனங்கள் மீது செல்வாக்கில்லாதவரை

அறிக்கை.

நாடார் எலிமெண்டெரி ஸ்கூல் மானேஜர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

25—6—27-ல் கூடிய நமது நாங்கம் கவுன்சில் மீட்டிங்கில் 1927—28-ம் ஆண்டுக்கு ரொமாந்த பள்ளிக்கூட பிரண்ட் விஷயமாய் ஆலோசனை செய்து ஓர் பட்ஜட் தயாரித்து நாங் கஷன் செய்திருப்பதால், நமது பண்பாதவலி தேவையுள்ள ஸ்கூல் மானேஜர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு 12—7—27-க்குள் விண்ணப்பம் செய்து கொள்ளவேணுமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விலாசம்:—

காரியதரிசி,

நாடார்மகாஜன சங்கம்,

மதுரை.

ராஜி உடன்படிக்கை எதுவும் உபயோகமற்றதாகும். உண்மைச் சுயராஜ்யத்தைப் பற்றி நினைப்பதற்கும் முன்னால் பாமர ஜனங்களிடம் நமது செல்வாக்கு நிலைபெற வேண்டும். அகில இந்தியக் கமிட்டி உடன்படிக்கை நிலையில் எவ்வகைப் பயனையும் தரவில்லை. அகிலே பகரீதி பண்டிதரின்போது அரசாங்கமே அமைதியை காட்டிற்று. இது நமக்கு அறியாக அகமானந்தருவதாகும்.

எனது அஹிம்சைக் கொள்கையில் கோழைத்தனத்துக்கு இடமில்லை. பலாத்கார பணிதன் ஒரு நாள் அஹிம்சையைக் கைக் கொள்ளலாமென்னும் நம்பிக்கையுண்டு. கோழையினால் அது முடியவே முடியாது. நமது பெண்மக்களையும், கோயில்களையும் அஹிம்சை முறையில், அதாவது தன்பம் சகிதலால் காப்பாற்றும் சக்தி நமக்கில்லாவிடில், சண்டை செய்தாவது காப்பாற்ற வேண்டும். இல்லாவிடில் நாம் ஆண்மக்கள் ஆகோம். வேற்றுமைகள் நமக்குள் பல இருக்கும். ஒன்று அவற்றை நமக்குள் மத்தியஸ்தத்தினால் தீர்த்துக்கொண்டு அரசாங்கத்தின் முன்பு ஒற்றுமை காட்ட வேண்டும். அப்படி மத்தியஸ்தர்களாகும்படி நமது நம்பிக்கையைப் பெற்றதலைவர்கள் இல்லை யெனின், அல்லது நாம் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ளவிரும்பாத காட்டு மிராண்டிகளாயின, களைத்துப் போய் அறிவு வரும் வரையில் சண்டையிட வேண்டும். நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும் சண்டையில் அரசாங்கம் தலையிட்டே தீரும். ஆனால் நம்மில் யாரும் அரசாங்கத்தின் உதவி கோராதிருந்தால் பலவீனமடைய மாட்டோம். அத்தகைய சண்டையில் கொலை செய்த ஒருவன் ஏன் வக்கீல் வைத்து வழக்காட வேண்டும்? அவன் தைரியமாகத் தூக்கு மரத்திற்குச் செல்லட்டுமே. அவ்வாறே கோயிலை இடிப்பவர்களும், வழிபோக்கர்களைக் கொல்பவர்களும், கடவுளுக்காக அவ்வளவும் செய்தோமென்று தைரியமாய்ச் சொல்லட்டுமே? நாம் இப்போது அனுசரிப்பதைவிட நல்ல தைரியமும், சேர்மையும் பொருந்திய வழியாயிருக்கும்.

காசரீகமடைந்த மனிதர்களைப் போல் மத்தியஸ்தம் செய்து கொண்டாலது, காட்டு மிராண்டி ஜனங்களைப் போல் சண்டை போட்டாலது நமது வேற்றுமைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாமல், பிரிட்டிஷ் நீதி, பிரிட்டிஷ் சுதந்தி இவற்றின் பாதுகாப்பைத் தேடுவதென்றால், நமக்கு நிச்சயம் சுயராஜ்யம் கிட்டாது. அதிகாரவர்க்க அரசாங்கத்தில் நாகுக் கூலி நிறை அதிகம் கிடைக்கலாம்; அதாவது பாமர ஜனங்களிடமிருந்து பறிக்கப்படும் பணத்தில் கொஞ்சம் அதிகப் படுகு. இதைத்தான் சீர்திருத்தங்கள் என்றோம். நாம் செய்து கொள்ளும் ஏந்த உடன் படிக்கையும் நம்மை அந்த நிலைக்குக் கொண்டு போகா வண்ணம் பார்த்துக்கொள்வோமாக.

நோட்டீஸ்.

கொளும்பில் ப. சி. அ. ம. மஹாராஜன் & கம்பெனி என்ற விலாசத்துடன் நாங்கள் கூட்டாக நடத்திவந்த வியாபாரத்தில் பங்காளியாயிருந்த மிஸ்டர் தூ. சிவராம கிருஷ்ணகாடாரவர்கள் நாங்கள் புரகடர் கொத்தாரிஸ் ஸ்ரீமான் ஜே. எச். ராசையா ஜோஸப் அவர்கள் மூலம் எழுதிரிஜிஸ்டர் செய்திருக்கிற எக்ரீமெண்ட் ஷரத் நிபந்தனைகளுக்குட்பட்டு 31—5—27 முதல் மேடி கம்பெனியைவிட்டு நீங்கிவிட்டபடியால் மேடி ப. சி. அ. ம. கம்பெனிசம்மந்தமான கொடுக்கல், வாங்கல், வியாபாரவிஷயங்களில் மேடி தூ. சிவராமகிருஷ்ணகாடாருக்கு யாதொரு விதமான பாத்யதையும், சம்மந்தமும் இல்லையென்பதையும் மேடி யாருக்கு நாங்கள் கொடுத்திருந்த (பவர்-ஆவ்-அட்டார்னி) தத்துவத்தை ரத்துச்செய்து விட்டோமென்பதையும் இந்தப் பரிங்க நோட்டீஸ் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ப.சி.அ.ம.மஹாராஜன் & கம்பெனி,

நிர் 85, குமார வீதி,

கொழும்பு.

கணித சோதிடம்.

பரமித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் அட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்பரூபாய் இரண்டு. ஆருடம் 5-கேள்விகளுக்கு விவரமானபதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனுக்கும், புருஷனுக்குப் பெண்ணும் இணங்குமென்று வெகு கலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளன. நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலனாகையினால் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகஞ் செட்டி,

முதலியார் பேட்டை, புதுக்கோட்டை.

தமிழ் புக் கீப்பிங்

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை புஸ்தகம் போதிப்பது, ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு வகைக்கு மடக்கியிருக்கின்றன. அனேக வியாபாரிகளெல்லோரும் முடைவது வியாபாரிகள், மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்

தே. ஆறுமுகஞ் செட்டி,

முதலியார் பேட்டை, புதுக்கோட்டை.

பச்சையிலைத் தைலம் கம்பெனி,

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

குஷ்டம் தீர்ந்த படம்.

குஷ்ட வியாதியுள்ளவரை முன்னதாகப் புகைப்படம் எடுத்து எங்கள் குஷ்டரண நிவாரண எண்ணெய் கொடுத்து அந்த வியாதியை சொஸ்தப்படுத்தி, மறுபடியும் புகைப்படம் எடுத்து வைத்திருக்கிறோம். குஷ்டரணம், குழிப்புண், படை, நிரி, மொர மொரப்பு யாவும் நீங்கிவிட்டதை அப்படத்தில் நன்றாயறியலாம். உங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் அப்படத்தை அனுப்புகிறோம்.

குஷ்டரண நிவாரண எண்ணெய் 20-நாள் புட்டி 1-க்கு ரூபா 20.
" " 40-நாள் " ரூபா 40.

சர்வரோக நிவாரணி

பச்சையிலைத் தைலம்.

வெள்ளை, வெட்டை, சிரத்தி, கொருக்கு, லிங்கப்புற்று, யோனிப்புற்று, கன்னப்புற்று, கபாலப்புற்று, அரையாப்பு, துடைவரழை முதலிய கொடிய நோய்களை (ஆப்ரேஷன்) அறுத்து கஷ்டப்படாமல் ஆச்சரியப்படும்படி ஆற்றிவரும் கைகண்ட மருந்து பச்சையிலைத் தைலம்.

மேக சம்பந்தத்தாலுண்டாகும் எல்லா வியாதிகளையும், ரணங்களையும், ராஜப்பிளவையையும், வாதசம்பந்தத்தாலுண்டாகும் கைகால் வீக்கம், குத்தல், குடைச்சல், அஷ்டவித குன்மங்கள், சூதகபந்தம் நீங்காத வயிற்றுவலி முதலிய சகல வியாதிகளையும் குரியனைக்கண்ட பனி போல் நீக்குவது பச்சையிலைத் தைலம்.

சாப்பிடுவதற்கும் கஷ்டமின்றி காப்பியில் துளிக் கணக்காக விட்டு சாப்பிடக்கூடியது பச்சையிலைத் தைலம்.

பெண்கள் சோயால் அவஸ்தைப்பட்டு (ஆப்ரேஷன்) அறுத்தாலுந்து மறுபடியும் இன்னமிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. உடம்பிலுள்ள ரத்தத்தைச் சிதாமலே அக்கோயிருக்குமிடத்தெரியாமல் பறக்கடிக்கக்கூடியது எங்கள் பச்சையிலைத் தைலம் எனப் பக்தலங்கட்டுவோம். உங்களுக்கு மருந்து சாப்பிடாமல் அந்த மேக வியாதி அறவே நீங்காது. ஆப்ரேஷன், இஞ்சக்ஷன் முதலிய மெச்சைகளால் உபசாரியானாலும் மீண்டும் கஷ்டப்படுவீர்கள். ஆகையால், நமது தமிழ்நாட்டின் பொக்கிஷங்களில் ஒன்றாகிய மூலிகைகளால் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்ட பச்சையிலைத் தைலத்தைச் சாப்பிட்டு வியாதியை அறவேயொழித்து சுகக்கதையடையுங்கள்.

7-நாள் சாப்பிடக்கூடிய தைலம் புட்டி 1-க்கு ரூபா 5-0-0. வி. பி. தபால் சார்ஜ் 0-6-0. பினங்கு, நெல்லூர், மலாய் காரன், கெட்டால் சென்னப்பிரிக்கா முதலிய தேசங்களிலுள்ளவர்கள் ரூபா 6-8-0 முன்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல்ஆர்டர் அனுப்பிப்பெற்றுக்கொள்ளவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection